பல்சுவை

# தமிழ்நெஞ்சம்

மார்ச் 2017



www.tamilnenjam.com

## கூடில்லா கிளைகளின் ஊஞ்சல்

துயரங்களால்
அறையப்பட்ட அந்த
நெடுஞ்சாலையில்
உறங்க மனதின்றி
ஒரு வெயிலின் நிழல்
தண்ணீரில் விழுந்து
நனைந்து கொண்டிருந்தது.
தாழப் பறக்கும்
தும்பிகளின் இறகுகள்
ஒரு குட்டி மஞ்சள் வானத்தை
மனசெங்கும் வரைந்து கிடக்கின்றன
சருகுகளை கழுவி
இலையுதிர்த்த
கிளைகளின் ஊஞ்சலில்
சோக ரகசியங்களை
கதைத்தபடி நிலவு தொட்டு
நனைத்து நதியோட்டுகிறது
நிரம்பிய
உயிர்க் கலசத்தில்
வேர் துளைத்த
ஆலமரக் கனிவை
முளைக்க விடுகிறேன் நான்
நீ பறித்துப் போகிறாய்
மீண்டும்
முறிந்து கிடந்த கிளையொன்றில்
கூடு கட்டி வந்தமர்கிறேன்
காற்றலைதலில் சிக்கிய
இலையின் நுனியென.....
கூடில்லா
கிளைகளின் ஊஞ்சல்
என்ன நன்றாகவா இருக்கும் ?

## மனவெளி

சொற் படிமங்கள்
நடுங்கி வியர்க்கின்றன
பயம், கோபம்,
மகிழ்ச்சி, துக்கம்
வலி,வேதனை
எல்லாம் கண்டு சிதைந்து
அவை எதனால் வியர்க்கின்றன
காத்திருக்க முடியாத
சகித்துக் கொள்ளாத
எதையும் சுமக்கத் திராணியற்று
அவை அலைகின்றன
சில கணங்கள்
சிறகுகள் உதிர்த்துக் கலங்கி
அழுது புலம்புகின்றன
பல நேரங்களில்
கவிதைகளையும் பாடுகின்றன
கொதித்தெழுந்து
மென்மையாய் சிறகடிக்கின்றன
ஏன் சில சமயம்
ஏதுமறியாது புன்னகைக்கவும்
மௌனிக்கவும் செய்கின்றன
மரண வெளி கடந்து
மனவெளி எங்கும் பரந்து
தேன் சிட்டுக்களாய் பறக்கின்றன
கொஞ்சம்
அண்ணார்ந்து பாருங்கள்
மிதந்து சென்று வான் முகட்டில்
துயிலற்ற முகில்களாக
சிமிட்டும் நட்சத்திரங்களாக
தேவதை நிலவாக
வெண் பனித் திட்டுக்களாக
தன்னை அடையாளம் காட்டுகின்றன!

*தமிழ் உதயா, லண்டன்*

நன்மக்கள் உள்ளமெலாம்
நல்லொளியால் நிரம்பட்டும்,
நன்னெறியால் எல்லோரும்
ஒருங்கிணைந்து திரும்பட்டும்!

பல்சுவை
# தமிழ்நெஞ்சம்
தோற்றம் 1972
மார்ச் 2017

ஆசிரியர் :
அமின் மொஹமெட்

இணையாசிரியர் :
சுஃபி மொஹமெட்

ஆசிரியர் குழு :
ஹிப்ஸுர் ரஹ்மான்
“காகிதம்” மனோபாரதி
சத்தியபாமா சந்திரன்
அழகுநிலா
சு.பீர்முகமது
ஓவியக்கவிஞர் உமாபதி
“நம் குடும்பம்” ஆ. வர்க்கீஸ்
நெல்லை உலகம்மாள்
வசந்தி ஆதித்தன்
கவிஞர் அ.முத்துசாமி
கவிஞர் ஈழபாரதி
கவிதாயினி செந்தாமரைக்கொடி
கவிஞர் கலந்தர் பூமதீன்
கவிஞர் பாலமுனை பாறூக்

ஆலோசகர்கள் :
“பைந்தமிழரசு” பாவலர் மா. வரதராசன்
கவிதாயினி சக்தி ஜோதி
கவிதாயினி அமுதா பொற்கொடி

web : tamilnenjam.com
email : editor@tamilnenjam.com

Tamilnenjam
59, rue des Entrechats, 95800 Cergy - France

புதிய ஆக்கங்களும், விமர்சனங்களும் எதிர்பார்க்கப்படுகின்றன. நூல் விமர்சனத்துக்கு, நூலின் இரண்டு பிரதிகளை அனுப்ப வேண்டும். படைப்புகளுக்கு படைப்பாளிகளே பொறுப்பு. செவ்வைப் படுத்த ஆசிரியர் குழுவுக்கு உரிமையுண்டு.



# ஓரவிழிப் பார்வையிலே

ஓரவிழிப் பார்வையிலே
ஒங்கிட்ட மயங்கிப்
போனேன்டி
ஓரமா ஒதுங்கி நின்னு
உன்னோட விருப்பம்
சொல்லுடி.

ஈரவிழிப் பார்வையில
என்னையே பாக்குறியே.
இளகித்தான் போச்சே
என் மனசு வாடுதைய்யா.

கண்ணாலப் பேசியே
காலம் போகுதடி
கையாலே தொட்டிடவா
கைக்கோர்த்துக்
கட்டிடவா.

பாக்குற பார்வையிலே
பஞ்சுப்போல பறக்குறன்
பாதித் தூக்கத்தில
கொஞ்சித்தான் பேசுறன்.

குறுவை விளையட்டும்
குறிச்சிடுவோம் தேதியை
தாளடி வெளையட்டும்
தாலியைக் கட்டுகிறேன்.

அலைபேச வாங்கித்தா
அன்பாகக் கொஞ்சிடுவோம்.
நல்லா உழைச்சியே
நகையெல்லாம் வாங்கிடு.

**கவிஞர். கோவிந்தராஜன் பாலு**

# மன்னிப்பு

“தவறு செய்வது மனித இயல்பு
மன்னிப்பது இறை இயல்பு”



**S.ஜெர்லின் பிரீமா**

மனிதராய் பிறந்த நாம் அனைவருமே தவறு செய்திருக்கின்றோம், செய்கின்றோம். தவறு செய்யாத மனிதன் இல்லை. இவ்வாறு தவறு செய்யும் நாம் மன்னிப்பு கேட்டிருக்கின்றோமா? அல்லது பிறர் செய்த தவறைத்தான் மன்னித்திருக்கின்றோமா? இது நிகழ்ந்திருக்குமா என்றால் சற்று சிரமம் தான். அப்படி நிகழ்ந்திருந்தால் தான் மகிழ்ச்சி நிலைத்திருக்குமே.

தவறு செய்யும் பெரும்பாலானோர் மன்னிப்பு கேட்பதில்லை. மன்னிப்பு கேட்க யோசிக்கிறார்கள். காரணம், நான் பிரச்சனைக்கு காரணம் இல்லையே, பிரச்சனையை நான் ஆரம்பிக்கவில்லையே, அதனால் நான் மன்னிப்பு கேட்கமாட்டேன். வேண்டுமானால் பிரச்சனையை ஆரம்பித்த அவன்(ள்) என்னிடம் மன்னிப்பு கேட்கட்டும் என்ற ஈகோ மனம் படைத்தவர்களாய் இருப்பதே.

பிரச்சனையை யார் ஆரம்பித்தால் என்ன? கணவன், மனைவி, தாய், தந்தை, அண்ணன், அக்கா, தம்பி, தங்கை, நண்பன் என உறவுகள் எப்படிப்பட்டதாய் இருந்தாலும் அவர்களிடையே இருக்கும் உறவு உண்மையானதாய் இருந்தால், அந்த உறவை அவர்கள் மதிக்கிறார்கள் எனில் தவறு யார் பக்கம் இருந்தாலும் மன்னிப்பு கேட்கவும்,

மன்னிக்கவும் தயங்கமாட்டார்கள். அந்த உறவு மீண்டும் நீடிக்கும்.

ஆனால், ஒரு சிலர் தான் செய்த தவறுக்காக மன்னிப்புக் கேட்டுவிட்டு மீண்டும் அந்த தவறை செய்யத் துணிவார்கள், செய்வார்கள். இதனால் அவர்களிடையே இருக்கும் நம்பிக்கை உடைக்கப்படுகிறது. உறவும் பாதிக்கப்படுகிறது.

மன்னிப்பு என்பது உறவில் ஏற்பட்ட விரிசலை இணைக்கும் பாலமாக அமைகிறது. அதே நேரத்தில் அவர்களிடையே இருக்கும் நம்பிக்கையும் அதிகரிக்கிறது. மன்னிப்புக் கேட்பதன் வழியாகவும், மன்னிப்பதன் வழியாகவும் அவர்களிடையே இருக்கும் பிரச்சனை கலந்தாலோசிக்கப்பட்டு தீர்க்கப்படுகிறது.

மன்னிப்புக் கேட்காமல் மன்னிக்காமல் இருப்பதால் அந்தப் பிரச்சனை மீண்டும் மீண்டும் அவர்கள் வாழ்வில் பெரியத் தாக்கங்களை ஏற்படுத்தி அவர்களின் உறவில் மிகப்பெரிய விரிசலை ஏற்படுத்தும்.

“பிரச்சனை என்பது உறவு வாயிலைப் பூட்டும் சாவி, மன்னிப்பு என்பது பிரச்சனையால் பூட்டப்பட்ட உறவு வாயிலைத் திறக்கும் சாவி”.

ஒருமுறை சாவியைப் பார்த்து சுத்தியல் கேட்டது, நான் உன்னைவிட வலிமையானவனாக இருக்கிறேன். ஆனாலும் ஒரு பூட்டைத் திறக்க நான் மிகவும் சிரமமப்படுகிறேன். ஆனால் நீ சீக்கிரம் திறந்துவிடுகிறாயே! அது எப்படி? என்று. அதற்கு சாவி சொன்னது, நீ என்னைவிட பலசாலிதான். அதை நானும் ஏற்றுக்கொள்கிறேன். பூட்டைத்திறக்க நீ அதன் தலையில் அடிக்கிறாய். ஆனால் நான் பூட்டின் இதயத்தை தொடுகிறேன் என்றதாம்.

ஒருவன் செய்த தவறுக்காக அவனை பழிவாங்குவதனாலோ, தண்டிக்கப்படுவதாலோ அந்தத்தவறிலிருந்து அவனை திருத்த இயலாது. மன்னிப்பு என்ற ஒன்று மட்டுமே அவன் உள்ள உணர்வைத் தூண்டி அந்தத் தவறிலிருந்து திருந்தி வாழ வைக்கும். ■


## தமிழ்நெஞ்சம்

தாளிதழ் தேவைக்கு தொடர்பு கொள்க:

**காகிதம் பதிப்பகம்**

13-B - TYPE - 2 குடியிருப்பு,
வட்டம் - 4, நெய்வேலி - 607801,
கடலூர் மாவட்டம்,
தமிழ்நாடு, இந்தியா.
கைப்பேசி / வாட்ஸப் : +91 8903279618
மின்னஞ்சல் : kaakitham@gmail.com


## கேளு, கதை கேளு

அண்ணனிடம் ‘கொரங்கு, மொதல’
கதெ கேட்டாள் சிந்தாமணி.
‘வயித்தெ கழட்டி வீட்லெ வெக்க ஆகுமா?
சாப்புட்டது எங்க விழுகும்?’
கவலையானாள் தங்கச்சி.

‘கெழங்கு, உள்ளி
வாங்கிட்டு வெரசா வாடா’
அம்மாவுக்கு -- பிள்ளைகள் பள்ளி அவசரம்!
‘கடெ கணக்கை கேட்டுப் போவியாம்!
நேத்து ரூபா பத்து கொடுத்தாச்சு!
வாங்குன தக்காளி ஒன்னரை ரூபா,
இன்னைய ரூபாவும் சேர்த்து, கழிச்ச
சொச்சம் காசோட வா!’
கோபு குழம்பி நிற்க,
‘ஒன் அம்மா போன் நம்பர் சொல்லுவியாம்!’
குடை விரித்து, செருப்பு தேடியபடி
கேட்டார் தாத்தா!
ஓடி, தன் செல் லைத்தேடி -
அலமாரி துழாவுறான் கோபு!

சந்து விழுந்த பல்லிடுக்கில்,
நாத்துழாவி உரக்கச் சிரித்து
பாட்டி சொன்னாள்,
‘டீ, சிந்தா, பாரு!
ஒங்கண்ணன், மூளையெ கழட்டி
‘செல்’ டப்பியில வெச்சிருக்கான்!’

உஷாதேவி, சென்னை

# ஒரு அவிக்நோனியின் விண்ணப்பம்



கட்டியவன் கழட்டிவிட்டதனால்
கண்ணகியாயிருந்து
மாதவியாய்ப்போனவள்
பேசுகிறேன்....

தோல் விற்கும்
இச் சந்தையிலே
என் கற்பை
என் பசி விற்றுத்தின்ன
சிவப்பு அறைக்குள்
பொதுவுடமை பண்டமான
பிண்டமாய்
நான் இறங்கிவிட்டேன்....

பார்த்தவுடனே என்னை
ஐட்டமேன்னு மதிக்க
கொண்டைக்கு
நெகிழி ரோஜா
உதட்டுக்கு
செஞ்சாயம்
மணக்க
மல்லிகைப் பூ சென்ற்...

இப்படி எப்படி ஒப்பனை
போட்டாலும்
எனக்கு நான் அசிங்கம்தான்
இந்த அசிங்கத்தையே
காசி கொடுக்காது
பார்வையாலே
புணரும் அசிங்கங்களும்
ம்....ம் ஏராளம்....

இப்போது பல சாவிகள்
திற(ரு)க்கும்
ஒரு உடைந்த
பூட்டு நான்...

நாளோன்றுக்கு
பல அறிந்த முகம்
சில அறியா முகம்
ஏறி இறங்கும்...
பல காம மிருகங்கள்
அப்போது
என் உடம்பைத் தின்னும்
இல்லை இல்லை
தின்னக் கொடுத்துவிட்டேன்...

பல்லில்லாக் கிழவன்
தன் முரசால்
என் உதடு கடிக்க
சீச்....சீ
வாய் நாற்றம்
குடலைப்பிடுங்கும்
அக்கனமே
தின்ட சோறும்
வாய் வழியாய்
வரப்பார்க்கும்...

எப்போதும் என் தனமேங்கும்
இரண்டு மூன்று காயம்
சில நேரம் ஆறாத
காயத்தின் மேல்

அடுத்த காயமும் வரும்...

வலியோடு
காசு கொடுத்தவனை
கண்டிச்சாலும்
கேட்பதில்லை
ருசி கண்ட கழுகு
பிணத்தை என்ன விடுமா?...

ஒரு வழியாய்
வந்தவன் வியாபாரத்தை
முடித்தால்
சட்டென
கண்ணாடி முன் நிற்பேன்
உடையை மாற்றுவேன்
திரும்பவும்
உதட்டுக்கு சாயமிடுவேன்
கலைந்த தலைமுடி சீவுவேன்
அப்போது
அந்தச் சீப்புக்கூட
பக்குவமாய் சிக்கெடுப்பதில்லை
ஜடம்...
அதுக்கென்ன தெரியும்?...

இப்படியாய் அலங்காரம்
சிலவேளை முடியும்
பலவேளை முடியாமாலிருக்கும்...

அந்த நேரம்
கதவு தட்டும்
சத்தம் கேட்கும்
ஆம் அது
இன்னொருவன்
அவன் பசியுமாற்றிய பின்
என்னுடம்பு எங்கும் வலிக்கும்
அழுவேன்
பின்
என்னையே நான்
தேற்றிக்கொள்வேன்
மண் தின்னும் உடம்பை
மனிசன் தின்னட்டுமென்று...


இப்படியாய் வயிறு
கழுவியபடியிருந்த நான்
வயிறு நிரம்பிய
கர்ப்பிணியாகுவதற்கும்
இடை இடையே ஆசைப்பட்டேன்
ஆனால்
வியாபாரம் சரிந்துவிடுமோ
எனப் பயந்தே பலதடவை
கலைத்துவிட்டேன்...

இருந்தும் ஒன்று
கருவாகி உருவாகி
பெண்ணாக பிறந்திடுச்சு
அவளுக்கு சீதை என
பெயர் வச்சிருக்கன்...

கடைசியாக
ராமன் வேடத்திலிருக்கும்
கோபலர்களே!
உங்களிடம் ஒரு விண்ணப்பம்...

என் மகளையும்
என்னைப்போல பார்க்காதீர்கள்
ஆக்காதீர்கள்
அவள் எப்படியானாலும்
உங்களுக்கு
மகள் முறைதான்....

பா.தூ




நூல் விலை 15 €
அனுப்பும் செலவுடன்.
email: editor@tamilnenjam.com



# நல்லவன்

மலர்மதி

குமரேசனைக் கண்டாலே பிடிக்காது யசோதாவுக்கு. எப்படிப் பார்த்தாலும் ரெட்டை அர்த்த சினிமா பாடல்களையே முணுமுணுத்துக்கொண்டிருப்பான்.

“மெதுவா மெதுவா தொடலாமா? உன் மேனியிலே என் கை படலாமா?” என்று பாடுவான்.

“‘பளார்’ என ஓங்கி அறை விடலாமா?” என பதிலுக்குப் பாடத் தோன்றும். ஆனால், அடக்கிக் கொள்வாள்.

நிர்வாகி கூப்பிட்டார் என்று வேகமாக நடந்தால், “மெல்லப்போ, மெல்லப்போ மெல்லிடையாளே மெல்லப்போ...” என்று பாடுவான்.

பொறுக்கி.

அந்த அலுவலகத்திலே அவளுக்குப் பிடித்த ஒரே ஆள் வேலுச்சாமிதான். அவர் மீது மிகுந்த மதிப்பும், பரியாதையும் வைத்திருந்தாள். வெற்றிலைப் போட்ட வாயும், விபூதி பூசிய நெற்றியும், தான் உண்டு, தன் வேலை உண்டு என்கிற அவருடைய கொள்கையும் யசோதாவுக்கு நிரம்பப் பிடித்துப்போயிற்று.

அவரிடம் இந்தக் குமரேசனைப் பற்றி சொல்லி வைத்தால் என்ன? என்று தோன்றியது. வேண்டாம். தன்னைப் பற்றி தவறான தகவல்கள் அலுவலகம் முழுக்கப் பரவிவிடும். அடக்கி வாசிப்போம் என அமைதியானாள்.

அன்று மாலை.

“யசோதா... இன்னைக்கு ஏகப்பட்ட வேலை. முக்கியமான கோப்பு ஒன்னை முடிக்கச்சொல்லியிருக்கார் நிர்வாகி. நீ எனக்குக்கொஞ்சம் உதவ வேண்டிவரும்” என்றார் வேலுச்சாமி.

“ஓ.. அதனாலென்ன ஐயா? இருந்து முடிச்சிட்டுப்போறேன்.” என்றாள்.

எல்லோரும் வெளியேறி அலுவலகம் வெறிச்சோடியபோது மெல்ல வந்த வேலுச்சாமி கதவைத் தாழிட்டார்.

திடுக்கிட்டாள் யசோதா.

“ஐ...யா... என்ன இது? ஏன் கதவை

அடைக்கறீங்க..?"

"ஒரு முக்கியமான விசயம் பத்திப் பேசணும். அதுக்காகத்தான்."

"எ.. ன்ன அது?"

"நீ மட்டும் என் ஆசைக்கு இணங்கிட்டா உனக்குப் பதவி உயர்வு வாங்கித் தாரேன்." என்று சொல்லிக்கொண்டே அவளை நோக்கி முன்னேறினார். அவர் விழிகளில் வெறி தாண்டவமாடியது.

அப்போது -

கதவு பலமாகத் தட்டப்பட, வெல வெலுத்துப்போன வேலுச்சாமி கதவைத் திறந்தார்.

வெளியே - நிர்வாகி !

அவருடன் குமரேசன் !!

"வேலுச்சாமி... நீங்களா இப்படி? த்தூ... அசிங்கமாய் இல்லே? குமரேசன் உங்களைப் பத்திச் சொன்னப் போதெல்லாம் நான் நம்பலை. இப்ப கையும் களவுமா பிடிச்ச பிறகுதான் விளங்குது. உங்களை உடனேவேலையை விட்டு நீக்கறேன்." என்றார் நிர்வாகி.

வியர்த்துவிட்டார் வேலுச்சாமி.

யசோதாவுக்கு மலைப்பாக இருந்தது.

மறு நாள்.

அலுவலகம் முடிந்து வீட்டுக்குக் கிளம்பிக்கொண்டிருந்தாள் யசோதா.

"சம்மதமா..? சம்மதமா..? நானும் கூட வர சம்மதமா..?" வழக்கம்போல் அவளைப் பார்த்துப் பாடினான் குமரேசன்.

"வாங்களேன்.." என்றாள் யசோதா நாணத்துடன். ■






# உலகின் மிகவும் சிறிய குட்டி நாடு

# Sea Land

இங்கிலாந்து நாட்டின் வட பகுதியில் எஸக்ஸ் என்ற இடத்திலிருந்து கடலில் 13 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது இந்த நாடு. இரண்டாம் உலகப் போர் தொடங்கியபோது 1942-ம் ஆண்டில் பிரிட்டிஷ் அரசு கடலில் குட்டித் துறைமுகத்தைக் கட்டியது. கடலில் இரும்பு மற்றும் வலுவான கான்கிரீட்டைப் பயன்படுத்தி இந்த துறைமுகத்தைக் கட்டியிருக்கிறார்கள். போரில் பயன்படுத்தப்பட்ட கப்பல்களுக்கு எரிபொருள் போடுவதற்காக இதைப் பயன்படுத்தியிருக்கிறார்கள்.

போர் முடிவடைந்த பிறகும் 1956ம் ஆண்டு வரை ரப் டவர் எனப் பெயரிட்டு இந்தத் துறைமுகத்தைப் பயன்படுத்தியிருக்கிறார்கள். பின்னர் இந்த இடத்தை அப்படியே விட்டுவிட்டார்கள் ஆங்கிலேயர்கள். 1967-ம் ஆண்டில் இந்த இடத்துக்கு பேட்டி ராய் பேட்ஸ் என்பவர் தனது குடும்பத்துடன் இந்தத் துறைமுகத்துக்குப் போய்த் தங்கிவிட்டார்.

இவர் முன்னாள் ராணுவ அதிகாரியாக இருந்தவர். இங்கு வந்த பேட்ஸ், ‘பிரின்ஸிபாலிட்டி ஆஃப் சீலேண்ட்’ என்று அந்த இடத்துக்குப் பெயரை வைத்தார். அங்கிருந்து ராய் பேட்ஸை அனுப்பப் பிரிட்டிஷ் அதிகாரிகள் நிறைய முயற்சி செய்தார்கள். ஆனால், அவரை அங்கிருந்து அனுப்ப முடியவில்லை. இந்த விவகாரம் நீதிமன்றத்துக்குப் போனது. ஆனால், இந்தத் துறைமுகம் இங்கிலாந்து நாட்டு கடல் எல்லைக்கு வெளியே இருப்பதால், வழக்கை நடத்த முடியாது என்று நீதிமன்றம் கூறியது. இதன்பிறகு ராய் பேட்ஸ் 1975-ம் ஆண்டில் சீலேண்டை தனி நாடாக அறிவித்தார். இந்த நாட்டுக்கென்று தனியாகக் கொடி, தேசியக் கீதம், பணம், பாஸ்போர்ட் என்று ஒரு நாட்டில் என்னவெல்லாம் இருக்குமோ எல்லாவற்றையும் பேட்ஸ் அறிமுகப்படுத்தினார்.

கடலுக்குள்ளஒருகுட்டிகட்டிடத்தில்தான் இந்த நாடே இருக்கிறது. ஒரு முறை பேட்ஸூம் அவரது குடும்பத்தினரும் இங்கிலாந்துக்குப் போனபோது, ஜெர்மனி, போர்ச்சுகல் கொள்ளையர்கள் இந்த நாட்டை ஆக்கிரமிப்பு செய்துவிட்டார்கள். பேட்ஸூம், அவரது மகன் மைக்கேலும் ஆயுதங்களைப் பயன்படுத்திக் கொள்ளை யர்களை விரட்டினார்கள்.

1987-ம் வருடத்தில் பிரிட்டிஷ் அரசு கடல் எல்லைப் பரப்பை 22 கிலோ மீட்டராக அதிகரித்து, சீலேண்டை அவர்களுடைய கட்டுபாட்டுக்குள் கொண்டுவர முயற்சி செய்தார்கள். ஆனாலும் முடியவில்லை. சீலேண்டின் இளவரசராக ராய் பேட்ஸ் செயல்பட்டு நிர்வாகமும் செய்து வந்தார்.

மூன்று வருடங்களுக்கு முன்பு பேட்ஸ் நோய்வாய்ப்பட்டு இறந்துவிட்டார். அப்போது முதல் சீலேண்ட் நாட்டின் இளவரசராகப் பேட்ஸின் மகன் மைக்கேல் இருந்து வருகிறார். தற்போது இவர்களது குடும்பத்தினர் உட்பட 50 பேர் இங்கு வாழ்ந்து வருகிறார்கள். இந்தக் குட்டிக் கட்டிடத்தில் 30 அறைகள் உள்ளன. கடலுக்குள் இருப்பதால் தேவையான நீரை அவர்களே உற்பத்தி செய்து கொள்கிறார்கள்.

ஞாபகச் சின்னங்கள் போன்றவற்றை இணையதளத்தில் விற்பனை செய்து பணம் சம்பாதிக்கிறார்கள். இந்த நாட்டுக்கு வெளி நாட்டுக்காரர்கள் யாராவது வர வேண்டுமென்றால் பாஸ்போர்ட், விசா எடுத்துக்கொண்டுதான் வர வேண்டும்.

ஜெஸி ஜெஸிகா



# குறுங்கவிதைகள்

■ இந்த வருட
ஓவியப் போட்டியில்
முதல் பரிசு கிடைத்திருக்கிறது
உன் பாதச்சுவடுக்கு.

■ உன்னை சுமந்து
செல்கிற சந்தோசத்தில்
தேய்ந்து போகிறது
செருப்பு.

■ ஒடுக்கபட்டவன் என்று
ஒதுக்கியது
சர்க்கார் மட்டுமல்ல
சமுதாயமும் தான்

■ குப்பைத்தொட்டிதானே என்று
கேவலமாக நினைக்காதீர்
அது பல குழந்தைகளுக்கு
கருவறை

■ பாவம்! அவர்கள்
பைத்தியகாரர்கள்
போயும் போயும்
ஒரு நாற்காலிக்காக
அடித்துக் கொள்கின்றனர்.

■ குடைக்குள் மழை
எங்கள் வீட்டு
குடிசைகளில்

■ மூடிமறைத்தாலும்
தெரிந்து விடுகிறது
உன் வெட்கம்

■ என்னிடம் சொல்லாலே
வந்து செல்கிறது
கனவு.

■ கோவிலில் சிறப்பு பூஜை
வெளியே கடவுளுக்குதொழுகை
உள்ளே காமத்தொழுகை

■ உன் விழி தந்த
வலி என் இதயத்தில்
காதலாக

■ தெருவிளக்கை
தேடிச் செல்கின்றன
இருள்

■ சாக்கடையிலும்
பூக்கின்றன
ரோஜாமலர்

■ மரங்களெல்லாம்
இறந்துவிட்டன
விலங்குகள் மட்டும்
அனாதையாக......

■ உன் சிகையில்
சிக்கிக்கொண்டது
என் சிந்தை

■ உன் கையிலிருக்கும்
மெழுகுத்திரியின்
வெளிச்சத்தை விட
ஒளியாய் இருக்கிறது
உன் முகம்

■ பெண்ணே!
தனியாய் இருக்கும்போது நீ
தயவுசெய்து பாட்டுமட்டும் பாடதே
குயில்தான் எங்கோ
கூவுகிறதோ என்று
வேடன் வந்துவிடுகிறான்.

■ என்றேனும் ஒரு நாள்
நான் பாடகனாகி விடுவேனென்ற
நம்பிக்கை எனக்கு இருக்கிறது
உன் கொலுசு சொல்லும்
மெட்டை என்னால்
பாடமுடியாதா என்ன!!!


■ சிலுவை சுமந்த
இயேசுவாய்
முதுகில்
புத்தக மூட்டையோடு
பள்ளி பிள்ளைகள்
என்ன பாவம் செய்தற்காக!!!

■ உன்னை நிலவென்று
சொல்கிறார்களே
நீ என்ன இரவில் மட்டும்
வந்துபோகும் குடுக்குடுப்பைகாரனா?
நான் உன்னை
வானம் என்றல்லவா நினைத்தேன்

■ கல்லூரியில் பதில்
சொல்ல முடியாமல்
முழித்த போது தான்
கசந்தது
பள்ளியில் அமைதியாய்
இருந்ததற்கு நான் பெற்ற
பாரட்டும் பைவ்ஸ்டாட்
சாக்லெட்டும்

- மனோபாரதி






*நூலின் பெயர் : வீழாதே தோழா*

பொருள் : சுயவரிகள் தன்னம்பிக்கை வரிகள்

*நூலாசிரியர் : மனோபாரதி,*
manobharathigr@gmail.com
www.facebook.com/manobharathigr
*கைப்பேசி* : +91 8903476567

என்
உயிர்க்கினிய தம்பி
மனோபாரதி,
துடித்தெழும் புலியாக
வெடித்தெழும் நெருப்பாக
கருத்து வித்துகளை
விதைத்திருக்கிறான்!
இது முளைத்தால் மரம்!
இல்லையேல் உரம்!

எதுகை மோனை
ஏர்பூட்டி நடக்க,
நன்செய் வயலில்
நாற்று நடமாடுவதாய்
வளமான கவிதைகளைப்
படைத்திருக்கிறான்!

தடைகளைத் தாண்டி
விடைகளைத் தேடும்
தன்னம்பிக்கை உடையார்க்கு
நன்னம்பிக்கை தரும் கவிதை
நாற்றங்கால் இந்நூல்!

எத்தகையார்க்கும்
அஞ்சாது
எடுத்துரைக்கும்
துணிவில் பூத்த
முல்லைச்சரமா?
இல்லை கவிதைச்சரம்
இந்நூல்!

சமுதாயத்தில்
மண்டிக்கிடக்கும்
சாதி மத
மோதல்களைத் தாண்டி
மனித நேயத்தை
மானுடத்தில் விளைக்கும்
நாளைய அறுவடை
இந்நூல்!

துவண்டு கிடப்பவனையும்
தூங்கிக் கிடப்பவனையும்
உசுப்பி விடும்
முயற்சியின் முழுவீச்சே
இந்நூல்!
மூச்சுவிட மறந்தவனும்
முயற்சி செய்ய மறந்தவனும்
வாழ முடியுமா?

முடியாது என்பதை
முற்றும் உணர்த்தும் நூல்!
“நூறு நூலகம் தோற்கிறது,
ஓர் சிறைச்சாலை
திறக்கையிலே” என்ற
கவிதை வரியே
தீப்பொறியாய்
தெறிக்கிறது!

”நேற்றைய நினைவொடு
நினைவொடுக்காதே
நேற்றினும் இன்று நீ
நெடிது வளர்ந்துள்ளாய்”

என்று அடுக்கிக் கொண்டே
அறிவுரை பகரும்
விடுதலைப் பாவலரேறு
ஐயா பெருஞ்சித்திரனாரின்
'வாழ்வியல் முப்பது'
என்னும் நூலைப் போல்
அறிவு தரும் அருவியாக
செறிவான சிந்தனைச்
சிதறலாக கவிதைகள்
கனலைக் கக்குகிறது!

என் பாட்டன் திருவள்ளுவர்
"உள்ளம் உடைமை
உடைமை பொருள் உடைமை
நில்லாது நீங்கி விடும்" என்கிறார்.
ஊக்கம் உடைமையே
உடைமையாகக் கருதப்படும்.
பொருளுடைமை நிலைபெற்று
நிற்காமல் நீங்கிவிடும்
என்ற உண்மையை உணர்த்துகிறார்.
அந்த ஆற்றல் மறவர்
அருந்தவ ஆசான்
திருவள்ளுவரின் பெயரக்குழந்தையாய்
தம்பி மனோபாரதி
இளைஞர்க்கும், மாணவர்க்கும்
மட்டுமா? அனைவருக்கும்
தன்னம்பிக்கை ஊட்டும்
கவிதைகளைத் தந்திருக்கிறான்.
இவனது முயற்சி தொடரட்டும்! தமிழின
மக்களைத் தட்டி எழுப்பட்டும்!
வென்றெடுப்போம் தமிழர் உரிமைகளை,
தமிழர் உலகை! அதற்கு ஒன்றாக நாம்
தமிழராய்ப்
படை எடுப்போம்!
வெல்க தம்பி!

**சீமான்**,
நாம் தமிழர்

வெளியீடு :

காகிதம் பதிப்பகம்
(மாற்றுத்திறனாளிகள் நடத்துகிற பதிப்பகம்)
முகவரி :
13-B, Type-2 Quarters, Block-4,
Neyveli - 607801 CuddaloreDist,
TAMIL NADU, INDIA.

kaakitham@gmail.com,
www.facebook.com / kaakitham
கைப்பேசி/வாட்ஸப் : +91 8903476567

பக்கங்கள் : 120

ISBN : 978-93-81134-46-7

விலை : ரூ.50/- (INR)

## நூலின் சில வரிகள்...

*உன்னை அறியாமல்
விண்ணை அளந்திடுவாய்...
நீ கனவு காணும் போது
விழித்திருந்தால்!*

*உளி உடைத்த
பாறை தான்,
கற்சிலை ஆகுமே!
விழி படைத்த
நீரைக் கண்டு,
தற்கொலை எண்ணம் ஏனடா?*

*எழிலாய்ப் பூத்த
திறமையால் தனித்திரு!- அதை
தொழிலாய் மாற்ற
சில உத்திகள் கணித்திடு!*

*தவறைத் திருத்தி
எழுச்சி சுவரை எழுப்பு!
கண்ணீர் வடிக்கையிலே...
நீ இறங்கு,
சுய நடவடிக்கையிலே!*

*கறை உள்ள பிறையும்
கவி காணாதே!
குறை உள்ள தேகமும்
கரை காணுதே!
சிறை கண்ட பறவையும்
சிறகு வளர்க்குதே!*

தி.விநோதினி



# போய் வருகின்றேன் மகனே...

பிளைட் இஸ் ரெடி டு லான்ட் அட் லோடிக் எயார்போர்ட் இன் ஃபியு செக்கன்ட் பாசன்சர்ஸ் பிளீஸ் வேர் யுவர் சீட் பெல்ட் (Flite is ready to land at Lodic airport in few second passengers please wear your seat belts)

விமானப்பயணத்தின் ஆசனங்களின் சொகுசில் அயர்ந்து தூங்கிவிட்ட அன்னம்மாப்பாட்டி தஸ் புஸ் என்று ஏதோ ஒலிபரப்பப்படும் சத்தத்தினைக்கேட்டு திடுக்கிட்டு கண் விழித்தவளாய் சுற்றும் முற்றும் விறு விறு என பார்வையைச் செலுத்தினாள். கண்ணயர்ந்தபோது தெரிந்த அதே அன்னிய முகங்கள்.

''என்னத்த உந்த இங்கிலிசில சொன்னாங்களோ தெரியாது .. ஒன்டுமே விளங்கேல்ல இதுக்குத்தான் சொல்றது படிச்சிருக்கோணுமென்டு, அது சரி என்ர அப்புவும் ஆச்சியும் பட்ட கஸ்ரத்தில எனக்கெங்க படிக்கக்கிடைச்சுது... ம்ம் ஆனா ஒரு சந்தோசம் என்ர பையன் படிச்சிற்றான் என்ர மகன் படிச்சிற்றான்ஞ் அதாலதானே ஏதோ ஒரு ஸ்கொலர்சிப்பில வந்து இந்த நாட்டில இருக்கிறான். அதுவும் ஏதோ றோபோக்களோட வேல செய்றானாம் ம் ம்... நானும் இத்தின நாளைக்கு பிறகு என்ர மகன பாக்க போறன். ம்ம்ம்."

நீண்ட பெருமூச்சொன்றை உள்ளிளுத்து வெளியிட்டாள். சோல் ஐ கெல்ப் யு மெடம்? (Shall I help you madam?)

அன்னம்மா பாட்டிக்கு புரியாத மொழியில் ஏதோ கேட்டுக்கொண்டு வந்த விமானப் பணிப்பெண் சீட் பெல்ட்டை பூட்டிவிட்டாள்.

"ஓ.... இதத்தான் கேட்டுக்கொண்டு பிள்ள (பொண்ணு) வந்திருக்கு என்ன வடிவான பிள்ள. ஆனா, இரவு பகலென்டு இப்பிடி அந்தரத்தில பறந்துகொண்டு வேல செய்யுது பாவம்" தனக்குள்ளே முணுமுணுத்தாள்.

தேசப்படத்திலே தேடினாலும் கண்டுபிடிக்க முடியாத ஒரு குக்கிராமத்திலே பிறந்து, அங்கேயே வளர்ந்து கோயில் குளம் வீடு வாசல் என்று இத்தனை காலமும் தனது கிராமத்து மண் வாசனையோடு உறவாடி புளுதி படிந்த கால்களைத் தட்டியபோது எழுந்த மண்வாசனையை நுகர்ந்தபடி பொழுதைக்கழித்த பாட்டிக்கு நேற்று விமான நிலையத்திற்கு புறப்பட்டதில் இருந்து நடப்பவை எல்லாமே அதிசயமாகவும் ஆச்சரியமாகவுமே இருந்தன.

"ஐயோ கடவுளே இதென்ன பிளேன் விளப்போகுதோ .... இப்பிடி ஒரு ஆட்டம் ஆட்டுதே ... கடவுளே."

தனது கிராமத்துத் தெய்வங்களை எல்லாம் துணைக்கு அழைத்தவளாய் சிறியதொரு அசைவோடு தரை இறங்கிய விமானத்தில்

இருந்து மெல்ல வெளியே வந்தவளை சக்கர நாற்காலியில் அழைத்துச்சென்ற நபர், சகல ஆவணப்பதிவுகளையும் முடித்து விருந்தினர் வரவேற்கும் பகுதிக்கு அழைத்துச் சென்றார்.

பழக்கமற்ற பல நடைமுறைகளால் படபடவென அடித்துக்கொண்ட மனதை ஒருநிலைப்படுத்தி மெல்ல நிமிர்ந்து பார்த்தாள்.

“அட அது... அது... என்ர பையன் கடவுளே என்ர மகன்... எப்பிடி இப்பிடி இவ்வளவு மாறி இருக்கிறான்... சின்ன வயசில பார்த்ததவிட ரொம்ப மாறி இருக்கிறான். மெல்ல நாற்காலியில் இருந்து எழுந்தவளாய் மேகன்... என்ர பையன்...” நீண்ட நாள் பிரிவு தொண்டையை அடைக்க ஓ என்று அழ வேண்டும்போல வெளிப்பட்ட குரலை மெல்ல அடக்கினான் பையன்.

“அம்மா இங்க எல்லாம் இப்பிடி எல்லாம் பெரிசா சத்தம் போட்டுக் பேச கூடாது. சத்தம் போடாதீங்க... வீட்ட போய் பேசலாம்.”

தாயின் கையைப்பிடித்து மெல்ல அழைத்துச் சென்றவன் “அம்மா இதில வெயிட் பண்ணுங்க கார் எடுத்திற்று வாறன்” என்றபடி நகர்ந்த பையனை கண் கொட்டாது பார்த்தபடி “அட காரோ” என்று அதிசயித்த மறு நிமிடம் “ஏறுங்கம்மா” என்று கார்க் கதவைத் திறந்து விட்டான்.

“ஆ அம்மா, மீட் மை வைஃப் யசுசி சங் அன் மை சன் டொங்” (Ah Amma meet my wife Jasusi sang and my son Dong)

மகன் அறிமுகப் படுத்திய காரில் இருந்த பெண்ணையும் பையனையும் பார்த்த பாட்டிக்கு மயக்கம் வராத குறையாக ‘ என்ன வைபோ வைப் என்டா உன்ர மனுசி தானே?யு மெல்லக் கேட்டாள்.

ஓம் அம்மா... சொல்லோணும் என்டு நினைச்சனான். பிறகு விட்டிற்றன் வரேக்க பாப்பீங்கள்தானே என்டு... மகனின் பதிலைக்கேட்டு வார்த்தைகள் அற்று தொண்டை அடைக்க “ஓ... வீட்ட போவம்“ அவரோகணத்தில் முனகினாள்.

இத்தனை நாட்களாக மெல்ல மெல்லக் கட்டி வைத்திருந்த கோட்டையில் சிறிய துவாரம். ‘போவம்‘ மீண்டும் முனகினாள்.

காற்றை கிழிக்கின்ற வேகத்தடன் விரைந்த கார் வானை முட்டுவதுபோல அமைந்திருந்த பல அடுக்கு மாடிக் கட்டடங்களின் நடுவில் சென்று நின்றது.

புதிய பூமி! புதிய உலகம்! மருமள் பேரன் என்று புதிய உறவு! இன்னும் புதிய பல பழக்க வழக்கங்களுடன் புதிதாய் தெரிந்த பழைய பையன். இயந்திர மயமான வாழ்க்கை மனதை பிசைகின்ற ஆனால் வெளியே சொல்ல முடியாத ஏதோ ஓர் வெறுமையோடு நாட்கள்கூட நத்தை வேகத்தில் நகர்ந்து கொண்டிருந்தன.

‘‘என்னம்மா இப்பெல்லாம் நீங்கள் பேசிறதயே குறைச்சிற்றீங்கள் ஏனம்மா? பிடிக்கேல்லயா இங்கத்தே லைப்?“ ஒரு நாள் மகன் கேட்டான்

அவனால் புரிந்து கொள்ள முடியாத மெல்லிய சிரிப்பொன்றை மட்டும் உதிர்த்தவளாய் ‘‘இல்ல மகன் அதெல்லாம் அப்பிடி இல்ல” பதிலளித்தாள்.

‘‘சுத்தமான சுகந்தக் காற்றும் சுகமான மண்ணும், சுருண்டு படுக்கும் பாயும் சுதந்திரமான என்னூரும் ஏன் சுகமான என் மொழியும் கூட தொலை தூரத்தில் தான்...“ தொண்டைவரை வந்த வார்த்தைகளை வாய்க்குள் விழுங்கிக் கொண்டாள்.

கிராண்மா வாய் (Grandma Bye) செல்லமாய் சிணுங்கிக்கொண்டு மருமகளின் பின்னால் ஒடிச்சென்று கொண்டிருந்த பேரனை பார்த்த பொழுது சற்று முன் தோன்றிய வேதனை மெல்ல தூங்கிப்போனது.

‘‘அம்மா... என்னம்மா கேட்டுக் கொண்டிருக்கிறன். நீங்கள் ஏதோ யோசிச்சுக்

கொண்டு இருக்கிறீங்கள்" பையனின் குரலில் மீண்டும் சுதாகரித்தாள்.

"ம்ம்ம்..."

வோங்க இன்டைக்கு பின்னேரம் பங்சன் ஒன்டுக்குப் போய்ற்று வருவம்டே

"நானும் கட்டாயம் வரோணுமோ" விருப்பமற்றுக் கேட்டாள்.

"ஒம் அம்மா வாங்க. ஒரே இப்பிடி தனியா உட்காந்திருந்து என்ன செய்யப் போறீங்க? ஆனா எங்கட "றாபோ ஜின் னுக்கு உங்களோட கதைக்கிறதுக்கு புறோகிறாம் பண்ணி வச்சிருக்கிறன். நாங்கள் வேலைக்கு போனா நீங்கள் அதோட கதைக்கலாம், பொழுது போக்கா இருக்கும் ஆனா, நீங்கள் தான் அதோட கதைக்கிறீங்களில்ல" பையன் சொல்லிக் கொண்டிருந்தான்.

அவளிடம் இருந்து மீண்டும் அதே சிரிப்பு ஆழமான சிரிப்பு.

"பையன படிக்க வைச்சு அவனுக்கு ஸ்கொலர்சிப் கிடைக்கிற அளவுக்கு முன்னேற்றி விட இப்ப றோபோவ எனக்கு துணையா விடுற அளவுக்கு படிச்சிருக்கிறான் ம் ம் ..." வேதனை கலந்த சிரிப்பொன்றை சிந்தியவளாய்...

"சரிப்பா நான் பங்சனுக்கு வாறன்" என்றபடி மெல்ல நகர்ந்து தன் அறைக்குச் சென்று கதவைத் தாளிட்டு மெத்தையில் சரிந்தாள். "ஏதோ ஒரு நாட்டில இயந்திர மனித மாநாடு நடக்கப் போகுதாம் இன்னும் கொஞ்சக் காலத்தில மனிதர்களை எல்லாம் இயந்திர மனிதன் கட்டுப்படுத்துமாம்" உள்ளூர் பள்ளிக்கூடத்து வாத்தியார் ஊரில் சொன்ன கதை ஞாபகத்துக்கு வந்தது. இதயம் கனத்தது. இமைகள் நனைந்தன. மெல்ல உறங்கிப்போனாள்.

"அம்மா ரெடியாயு மகனின் குரலில் துயில் கலைந்தபோது மாலை என்பது மனதில் உறைக்க "இதோ இப்ப கொஞ்ச நேரத்தில வாறன்'' தனக்கு பழகிப்போன சேலையை சுற்றிக்கட்டிக் கொண்டு மகனின் குடும்பத்தோடு புறப்பட்டாள்.

மாலை நேரத்திற்குரிய விளக்குகளின் ஒளியில் கடிகாரமுள்ளின் சீரான ஓட்டம் உலகத்தின் தத்துவத்தை உரக்கச் சொல்லியது. மனிதர்களைப் போல் அன்றி இந்த முள் மட்டும்தான் ஏனோ என்றுமே ஒரே சீராய் ஓடிக்கொண்டிருக்கிறது. வண்ண வண்ண உடைகளோடு அலங்காரமாய் வந்திருந்த விருந்தினர்களை வரவேற்று அவர்களோடு சிற்றுண்டிகளைப் பரிமாறி புகைப்படங்களினை எடுத்துக்கொண்டிருந்த முதியவரின் அருகே அன்னம்மா பாட்டியும் தனது மகன் மருமகளுடன் புகைப்படமொன்றை எடுத்துக்கொண்டு வீடு திரும்பிக்கொண்டிருந்தாள்.

"என்ன நிகழ்ச்சி அது? ஏன் அவர் இப்பிடி விருந்து வச்சவர்" மெல்ல மகனிடம் கேட்டாள்.

"அம்மா அது சேய் வாய் பாட்டி (Say Bye party) உங்களுக்கு விளக்கமா சொல்லோணுமென்டா அது போய்ற்று வாறன் என்டு சொல்ற பார்ட்டி"

"என்னது போய்ற்று வாறன் என்டு சொல்ற பாட்டியோ புரியலப்பா" மீண்டும் கேட்டாள்.

''யேஸ் (Yes) இங்க இப்பிடித்தான் வாழ்க்கையில எல்லாத்தையும் வாழ்ந்து முடிச்சிற்றன் என்டு நினைக்கிற வயசு போன ஆட்கள், தங்களுக்கு இனியும் வாழ விருப்பம் இல்ல என்டு தோணினா அத அரசாங்கத்துக்கு அறிவிச்சா அவேட விருப்பத்த அரசாங்கம் நிறைவேற்றி அவோட வாழ்க்கைய முடிச்சு வைக்கும். அப்பிடி வாழ்க்கைய முடிக்கிறதுக்கு முன்னால இப்பிடி ஒரு பார்ட்டி குடுத்து எல்லாரிட்டையும் இருந்து விடை பெறுவினம். இது இங்க சகஜம்" மகன் சொல்லிக்கொண்டிருந்தான்.

"ஆ....அப்பிடியா?" வேறு வார்த்தைகள் அற்று மௌனியானாள்.

"கிராண்மா.." என்று கூப்பிட்ட செல்லப் பேரனின் குரல் கூட அவளது காதுகளில் விழவில்லை.

மெத்தையில் புரண்டாள். தூக்கம் தொலைதூரம் போய் தொலைந்து போனது. சிரிப்புடன் விடைபெற்ற முதியவரின் முகம் மட்டும் நினைவுகளில் நிழல் ஆடியது. இனம்புரியாத வலி... ஏற்றுக்கொள்ள முடியாத நிலை.. நகரும் நாட்களில் நிசப்தமாய் இவள் பயணம்.

அலுவலகக் களைப்புடன் வீட்டிற்கு வருகின்ற மருமகளின் முகம் இன்று மட்டும் ஏனோ சற்று வித்தியாசமாய் கண்களில் நீர்க்கோர்ப்புடன்....

மொழி புரியாவிட்டாலும் உணர்வுகள் புரிந்தவளாய் மருமகளை உற்று நோக்கினாள். வேற்றுப் பெண் என்றாலும் தன்னை கடிந்து ஒரு வார்த்தை கூறாமல் தானுண்டு தன் வேலையுண்டு என்று இருக்கின்ற மருமகள் மீது அதீத அன்பொன்று இருக்கத்தான் செய்தது.

மாலையில் மகனிடம் மெல்ல வினவினாள்.

“அம்மா யசுசி சங் அழுதத்துக்கு காரணம் வேற. நாங்கள் ஒரு பொம்பிள பிள்ளைக்கு லாப்பில விண்ணப்பிச்சிருந்தம். அத தர ஏலாதென்டு சொல்லிற்றாங்க. அதால தான் யசுசி சங் அழுதவா”

“என்ன லாப்பில விண்ணப்பிச்சனீங்களோ? விளையாடாத”

“ஆமாம்மா இங்க இப்பிடித்தான். எங்களுக்கு பிள்ளையள் வேணுமெண்டா அவைய வளக்கிறதுக்குரிய வசதி வாய்ப்புக்கள எல்லாம் செய்திற்று எப்பிடியான குழந்த வேணுமென்டு லாப்பில விண்ணப்பிச்சா குளோனிங் முறையில உருவாக்கி வளத்து தருவினம்“

‘‘உங்கட பேரன கூட இப்பிடித்தான்

# நாணத்தின் சிரிப்பு!



நாணத்தின் சிரிப்பிதுவோ?
நங்கையவள் குதூகலிப்போ?
மோனத்தின் நிலையினிலே
மோதிநிற்கும் புன்சிரிப்போ,

எழிலுனக்கு சாதனம்தான்
இயற்கைதரும் சீதனம்தான,
விழிமூடி இருந்தாலும்
விவரிக்கும் மோகனம்தான்.

மனசுக்குள் பூரிப்பு
மங்கைநீ வாளிப்பு,
குணவதியே உன்மனமோ
கொளுத்திவிட்ட மத்தாப்பு.

இரட்டைச்சடை மிகஅழகு
இனிமையான முகமழகு,
திரட்டிவந்த எழிலையெலாம்
தேக்கிவைத்தப் பேரழகு.

தாவணியில் நீவனப்பு
தாவிவரும் உன்நினைப்பு,
ஆவணியில் பரிசம்போட
ஆடிவரும் உன்னழைப்பு.

**கவிஞர் அ. முத்துசாமி**

எடுத்தனாங்கள்". "போன வருசம் இப்பிடித்தான் ஒரு பொம்பிள பிள்ளைக்கு லாப்பில விண்ணப்பிச்சிருந்தம் எங்கட குடும்பத்தில மொத்தம் நாலு பேர் இருக்கிறதால ஆக்கள் கூட எண்டு ரிஜக்ட் பண்ணிற்றாங்க" மகன் சொல்லச் சொல்ல எழுந்து நடக்க இயக்கம் அற்றவளாய் கதிரையில் சரிந்தாள்.

உள்ளம் நடுங்க உணர்வுகள் ஒடுங்கி உடல் தள்ளாடியது. ஊரில் இருக்கின்ற போது அடிக்கடி உச்சரிக்கும் கடவுளைக் கூட கூப்பிட மனமின்றி தூரத்தில் எதையோ வெறித்துப் பார்த்தாள். இனம்புரியாத வலியோடு அவளின் உலகம் போர்க்களமாக மாறியது. ஓராயிரம் சிந்தனைகள் கண நேரத்தில் கருவெடுத்து கார்கால மேகங்களாகி கருமழை பொழிந்தன. பையனை படிக்கவைத்து விட்டேன் என்ற மகிழ்ச்சியில் அவள் கட்டிய கோட்டை கண்முன்னே கரைந்து காணாமற்போனது.

நாட்கள் மெல்ல நகர்ந்தன. வெறுமையாய் கழிந்த அவளின் வெற்றுப் பொழுதுகளிற்கு விடை கொடுத்து தன் மகனிற்கு மகிழ்வு கொடுக்கத் துணிந்தாள். தனது உள்ளத்து ஓட்டத்தினை ஒரு நாள் மகனிடம் வெளிப்படுத்தினாள்.

"தம்பி நாங்கள் ஒரு நாள் அந்த பார்ட்டிக்குப் போனம் ஞாபகம் இருக்கா? அதே போல நானும் பார்ட்டி குடுக்கலாம் என்டு இருக்கிறன். அப்பிடிச்செய்தா உங்களுக்கும் ஒரு பொம்பிளைப்பிள்ளய எடுக்கலாம் தானே..."

மௌனமாய் கேட்டுக்கொண்டிருந்த மகன் "சரி அம்மா.. உங்களுக்கு ஓகே எண்டா எனக்கும் ஓகே உங்களுக்கு எது விருப்பமோ அத நான் செய்றன்" என பதிலளித்தான்.

அலங்கரிக்கப்பட்ட மண்டபத்தில் அலங்கார ஆடைகளுடன் கதாநாயகியாய் நிமிர்ந்து நின்ற அன்னம்மாவின் கண்கள் தூரத்தில் விருந்தினர்களின் நடுவே சிற்றுண்டிகளை பரிமாறிக்கொண்டிருந்த மகனில் நிலைத் திருந்தது. சிறிய வயதில் தந்தையை இழந்த அவனுக்கு குடும்ப வறுமை தாக்காது மடியோடிருத்தி மார்போடணைத்து அமுதூட்டிய கணங்கள் நினைவோடு நிழல்கோர்த்தது.

தனக்கு கிடைக்காத கல்வி தன் மகனுக்கு கிடைக்கவேண்டும் என்று அவள் கண்ட கனவு மெய்ப்பட்டு இன்று... இப்படி மெஞ்ஞானத்தின் விஞ்ஞானமாய்....

சேய் பாய் பாட்டி (Say Bye party) இதுநாள் வரை அவளது வாய்க்குள் வராத ஆங்கிலம் இன்று வந்தது மெல்லச் சொல்லிக் கொண்டாள்...யுசேய் பாய் பாட்டி....உன்ர சந்தோசம் தான் என்ர சந்தோசம்டே அவளது கண்கள் ஈரமாகி இருந்தன.

மகனே, என் அன்பு மகனே!

முதன் முதலாய் அவனை மடிமீது வைத்து மார்போடு அணைத்தவேளை தோன்றிய உணர்வோடு மெல்லத் தன் மொழியில் சொல்லிக்கொண்டாள் "போய்ற்று வாறன்"

# உன்போல் அழகு



இளையராஜா

இதுவரையில்
ஒடுக்குப் பானைகளையும்
ஓட்டை பானைகளையும்
செய்து ஊரில்
ஏச்சிக்கும் பேச்சிக்கும்
ஆளாகிய குயவன்
நீ பிசைந்துக் கொடுத்த
மண்ணில் அழகழகாய்
பானைகள் செய்து அடுக்கி
வைத்திருக்கிறான்
உன் அழகைப்போலவே...



# சீ... தனம் புலம்பெயர்விலுமா!

**கௌசி**

பணமென்னும் பிசாசு ஆட்டுகின்ற ஆட்டம்
மனமென்னும் பேதைக்குப் போடுகின்ற தூபம்
விதை போட்டது யாரென்று புரியாத போதும்
புலம்பெயந்தும் திருந்தாத மந்தையர் கூட்டம்

பெண்ணைப் பெற்றால், வயிற்றில் புளியைக் கரைக்கும் நிலைமை புலம்பெயர்விலுமா!

பலரின் புலம்பல் என் பார்வையிலும் என் கருத்திலும் இங்கு பதிவாகின்றது.

சீதனம் பெறும் போதே தனம் என்னும் செல்வம் சீ என்னும் வெறுப்புக்கு உள்ளாகின்றது. பெற்றோர் பெண்ணைப் பெற்று கல்வி, செல்வம், குடும்பப் பொறுப்பு, பொறுமை, அத்தனையும் சேர்த்துக் கொடுக்கத் திருமணம் என்னும் பெயரில் தாலியைக் கழுத்தில் கட்டிவிட்டு சொந்தம் கொண்டாடும் ஆண்மக்களே!

பெண் என்பவள் இச் சமுதாயத்தை ஒரு குடும்பத்தை சுமக்கின்ற அச்சாணி. இப்பெருமை எல்லாம் சேர்த்தே பூமிக்கு, பூமாதேவி என்னும் பெண்பால் பெயரிட்டார்கள். செல்வத்தைக் கொடுப்பதாகக் கருதும் கடவுளையே பெண்ணாகக் கருதி இலக்குமி என்று பெயரிட்டார்கள். வாழ வந்த வீட்டிற்கு வளம் சேர்க்கும் பெண்களை பணம் சேர்த்துக் கொண்டு வாருங்கள் என்று வாயைப் பிளந்து கொண்டிருக்கும் வறிய கையாலாகாத ஆண்சமுதாயமே!

திருமணம் என்பது இருவர் இணைந்து வாழுகின்ற ஒரு கோட்டை, வளருகின்ற விருட்சம். இது தகர்த்து எறியப்படவோ? இடையில் வெட்டி விழுத்தப்படவோ கூடாது. இக்கோட்டைக்கு உற்றார் உறவினர்கள் அரணாக இருக்க வேண்டும். ஆரம்பமே, அடித்தளமே ஆட்டம் கண்டால் வாழ்க்கையை நிறுத்தமுயுமா? வாழ்வு நிலையாகுமா?

பணமில்லாது வாழ்வில்லை. பணமே வாழ்வுமில்லை. இது புரிந்தே உலகில் யாவரும் வாழுகின்றனர். ஆனால், பிறரின் உழைப்பில் பணம் சேர;க்க நான் நினைப்பதில் நியாயம் இருக்கின்றதா? பெண்ணையும்




ஆணையும் சேர்த்து வைக்கலாம். இதனால் வம்சம் விருத்தியாகும், வாழ்க்கை சிறக்கும். பெண்ணோடு சேர்த்து பணத்தையும் தாருங்கள். அப்போதுதான் ஓரளவாவது வாழ்க்கையை என்னால் கொண்டு இழுக்க முடியும் என்று கேட்பது ஆணுக்குக் கேவலம் இல்லையா?

யாழ்ப்பாணத்து அரசர் காலத்து நடைமுறைகளின் தொகுப்பாகிய சீதனம் என்பது, யாழ்ப்பாணத்தை ஒல்லாந்தர் ஆண்டகாலத்தில் 17 ஆம் நூற்றாண்டில் கொண்டுவரப்பட்ட தேசவழமைச் சட்டமாகும். கேரளாவில் நடைமுறைப்படுத்தப்படும் மருமக்கட்தாயச் சட்டத்தின் கூறுகள் யாழ்ப்பாண சமுதாய நிலைமைக்கு ஏற்ப மாற்றமடைந்து யாழ்ப்பாண சீதன முறை கொண்டுவரப்பட்டது. ஆண் கொண்டுவரும் சொத்து முதுசம், பெண் கொண்டுவரும் சொத்து சீதனம், ஆணும் பெண்ணும் சேர்ந்து தேடிக்கொள்ளும் சொத்து தேடிய தேட்டம். இவ்வாறு விக்கிபீடியா சீதனத்துக்கான விளக்கம் கொடுக்கின்றது. இப்போது முதிசம் எங்கோ மறைந்தது? சீதனம் இங்கே நிலைத்தது. தேடிய தேட்டமே நடக்க வேண்டியது.

பெண்கள் தொழிலின்றி வீட்டில் கணவன் உழைப்பை எதிர் பார்த்துக் காத்திருந்த காலப் பகுதியில், பணம் படைத்த பெற்றோர் நன்கொடையாக, அதாவது அன்பளிப்பாக மகளின் திருமண மகிழ்வில் கொடுத்த நிகழ்வு நடந்து முடிந்து விட்ட நடைமுறை ஆகும். இன்று பெண்ணும் ஆணும் சரி சமமாக உழைக்கும், அல்லது ஆணை விட பெண் கூடுதலாக உழைக்கும் காலம். இக்காலத்திலும் சீதனம் என்ற பெயரில் பிச்சை எடுக்க நினைப்பது சமுதாய சீர் குலைவு.

"சீதனம் எவன் கேட்டால் செருப்பெடுத்தடி
கோவணம் கட்டிய கும்பகனை மணமுடி"

ஏனென்றால் பெண் தன் குடும்பத்தை நடத்தக் கூடிய வலிமை மிக்கவள் இல்லையா? ஆண் எப்படித்தான் இருந்தால் என்ன?

**"தற்காத்துத் தற்கொண்டாற் பேணித் தகை சான்ற
சொற்காத்துச் சோர்விலாள் பெண்"**

கற்பு நெறியில் தன்னையும் காத்து, தன் கணவனையும் காத்து, தகுதி வாய்ந்த புகழையும் காத்து உறுதி தளராது வாழ்பவளே பெண் என்று வள்ளுவரே கூறியிருக்கின்றார்.

சீதனம் கேட்பதும், கொடுப்பதும் குற்றம் என்றே கருதுகின்றேன். கடந்த காலத்தை மறந்து சீதனம் கேட்பது பெண்களே என்பது உண்மையே. அவர்கள் கருத்தில் ஆணுக்குப் பின், பெண்ணைப் பெற்ற தாய்மார் ஆணைக் கொடுத்துக் கறக்கும் பணத்தைப் பெற்று அடுத்துத் திருமணத்திற்காக காத்திருக்கும் பெண்ணுக்கு சீதனம் கொடுக்கத் திட்டம் இடுகின்றனர். மகனை வளர்க்க செலவு செய்ததை வரும் மருமகள் குடும்பத்திடம் இருந்து கறக்க நினைக்கிறாள். அடிப்படையில் இயலாமையே இதற்கு காரணமாகின்றது. புலம்பெயர்வில் அதிகமாக அரசாங்கப் பணத்தில் வளர்க்கும் மகனுக்கே சீதனம் எதிர்பார்க்கும் பெற்றோர். பெற்றேன் கஷ்டப்பட்டு வளர்த்தேன் என்றெல்லாம் வாய் அளப்பது சரியா? தாய் சொன்னார். தனையன் தலை ஆட்டுகின்றான். தாயிற் சிறந்த கோவில் இல்லை என்று காரணம் காட்டி பணத்துக்கு தலை பணிந்து நிற்கின்றனர் ஆண்கள். அதனால், கோவிலினுள்ளே உள்ள சக்தியாக இருக்க வேண்டிய தாய். சீதனம் கேட்டு பழமொழியையே மாற்றி அமைக்கின்றாள்.

பெண்ணைப் பெற்றவர்கள் கூறுகின்றார்கள். பிள்ளையைப் படிக்க வைத்து சிறந்த உத்தியோகம் பெற வைத்து திருமணம் செய்து கொடுக்கும் போது. சீதனமும் தா எனக் கேட்டல் எவ்வகையில் நியாயம் ஆகின்றது. என் பிள்ளை உழைத்துக் கணவனையும் கண் கலங்காது பார்த்துக் கொள்வாள். தன் வாழ்க்கையையும் உயர்வுக்குக் கொண்டு வருவாள். கணவன் உழைப்பில் மண்டியிட்டுக் கிடக்க வேண்டிய அவசியம் இல்லை. தன் மகளை வாழ வைக்க அக்காலம் போல் மருமகனுக்குச் சீதனம் கொடுக்க வேண்டிய அவசியம் இல்லை. பணம் மட்டுமா, தங்க நகையையே விரும்பாத பெண்களுக்கு தங்க நகைகளும் சீதனமாகக் கேட்கின்றார்கள். வாழ வழி அற்று புலம் பெயர்ந்த நிலைமை மறந்து சொந்த நாட்டில் வீடற்று தங்க வந்த இடத்திலேயே சீதனமாக வீடும் கேட்கின்றார்கள். இரவு பகலாக உழைத்து இரண்டு மூன்று வேலை என்று செய்து வீட்டை வாங்கி, வங்கிக்கு பணத்தைக் கட்டிக் கொண்டிருக்கின்ற சூழ்நிலையில், வீட்டை மகள் பெயருக்கு எழுதும் படிக் கூறிப் பின் மகனை வளைத்துத் தன் மகளுக்கு அவ்வீட்டை எழுதிக் குடுக்கப் பண்ணும் பெற்றோரின் திறமைக்கு நாம் என்ன மடையர்களோ? என்று கேள்வி கேட்கும் பெண்ணைப் பெற்றோர் வாழும் வரை உழைத்து வீடு வாங்கி மீண்டும் வாடகை வீட்டில் குடியிருக்க விரும்புவாரோ!

ஐரோப்பிய நாட்டில் வளருகின்ற பெண்கள் கணவனை விலை கொடுத்து வாங்க மறுப்பதனால், திருமண கலாச்சாரம் மறைந்து போகும் நிலை ஏற்படுகின்றது. ஐரோப்பிய கலாச்சாரம் மேலோங்குகின்றது. இயற்கையான உடல் இச்சைகள் தவறான வழிகளில் தடுமாறும் சூழல் ஏற்படப் போகின்றது. கலாச்சாரக் கட்டுப்பாடுகள் மீறும் நிலை வரும் காலங்களில் மேம்படப் போகின்றது. ஐரோப்பிய நாடுகளில் சூழல், சுற்றம், உறவினர் போன்றோருக்குப் பயந்து பெண்கள் வாழ்ந்த நிலைமை இல்லையென்பதால் சுதந்திரம் என்ற பெயரில் பெண்கள் நடமாடுவதற்கு வழி வகுக்கும் ஆண்களைப் பெற்றவர்களே சிந்தித்துப் பாருங்கள். புலம்பெயர்வில் சீ... தனம் தேவையா?

*எழுதி விட்டேன். இது பற்றி காலம் காலமாக எழுதப்படுகின்றது. ஆயினும் சமுதாயம் சீர்பெற ஒரு சிந்திப்பு என்னாலும் நடக்கட்டும்.*





# உறவுகள் அழிவதில்லை

அப்பா... அங்கே என்ன செய்யுறீங்க?

எவ்வளவு சொன்னாலும் கேட்க மாட்றீங்க?

நேத்து தானே அந்த டாக்டர் உங்கள நல்லா ரெஸ்ட் எடுக்க சொன்னார். ஆனா நீங்க யார் பேச்சையும் கேட்காம கொல்லைய கொத்திக்கிட்டு இருக்கீங்க..

சீனு டாக்டர்னா ஆயிரம் சொல்வாங்கப்பா அதுக்காக சும்மாவே இருக்க முடியுமா?

ப்ளீஸ் ப்பா வீட்டுக்குள்ள போங்க. ரெஸ்ட் எடுங்க. மகன் பேச்சை தட்ட முடியாமல் வீட்டுக்குள் சென்றார் பெரியவர் மருது.

சீனுக்கு அப்பான்னா உசுரு. அம்மா இல்லாம ஒத்தை ஆளா நின்னு கஷ்ட பட்டு வளர்த்து நல்லா படியா படிக்க வைச்சு நல்ல வேலையில் மகனை நிலை நிறுத்தியவர். தன் மகனுக்கு அவன் ஆசை படி ஒரு நல்ல பெண்ணையும் திருமணம் செய்து வைத்தார். தள்ளாத வயதிலும் தன் மகனின் புது வீட்டு வேலையை இழுத்து போட்டு செய்தார். என் மவன் வாழ போற வீடு கண்ட பயல நம்பி கொடுத்தா கெடுத்து புடுவானுங்க அதான் என் மவனுக்காக பார்த்து பார்த்து செய்யுறேன்னு தன் மனசு நிறைஞ்சு செஞ்சவரு. தன் மவன் வீடு கட்டி முடிச்சும் கூட சும்மாவா இல்லாம கொல்லையில தென்னை போடுறேன், வாழை போடுறேன்னு, கொய்யா போடுறேன்னு எதாவது துறு, துறுன்னு செஞ்சுக்கிட்டே இருப்பாரு.

உடம்புல சுகர், பீ பீ இருந்தும் அதை பத்தியெல்லாம் கவலை படாம எப்போதும் சுறு சுறுப்பா இருந்த மனுஷன்... யார் கண்ணு பட்டதோ நல்லா இருந்த மனுஷன் திடீர்னு படுத்த படுக்கையாயிட்டார்... பெரிய ,பெரிய ஆஸ்பிட்டல வச்சும் கூட அப்பாவுக்கு உடம்பு குணம் ஆகலை. சீனு ரொம்ப மனசொடிஞ்சு போனான். தனக்கு பக்க பலமாய் இருந்த அப்பா, சிங்கமாய் ஓடி, திரிந்த அப்பா பாத்ரூமுக்கு கூட தனியா போறதுக்கு கஷ்ட படுறதை கண்டு ரொம்ப தேம்பி, தேம்பி அழுதான் சீனு.

சிறிய வயதில் தான் அசிங்கம் செய்தாலும் அதை மனமுவந்து சுத்தம் செய்யும் அப்பாவை இப்போது ஒரு சிறிய குழந்தையாய் நினைத்து கொண்டு எல்லாத்தையும் விருப்பப் பட்டு செய்தான். என் அப்பா பழைய மாதிரி நல்லா படியா ஆயிடனும்னு அனு தினமும் ஆண்டவனை வேண்டினான் சீனு. நல்லவர்களை தான் அந்த பொல்லாத கடவுள் சோதிக்கும் என்பார்கள், ரொம்ப நல்லவர்களை அந்த கடவுள் ரொம்ப ரொம்ப சோதிப்பான் என்பது சீனு வாழ்க்கையில் ஊர்ஜிதமானது.

ஆம் மருது இறந்து போனார். அப்பாவின் இறப்பு சீனுவின் சந்தோசத்தை பறித்து சென்றது. அவனது வாழ்க்கையே சூன்யமாய் தெரிந்தது.

சில வருடங்களுக்கு பிறகு...

ஊரே வெயில் கொடுமையில் அவதி பட்டாலும் சீனுவின் வீடு மட்டும் குளு, குளு வென்று இருந்தது. கொல்லை கதவை திறந்தாலே காற்று தென்றலாய் வீசியது. கொல்லையில் தென்னையும், வாழையும் பெரிதாய் வளர்ந்து நின்றன. மல்லி, செம்பருத்தி, கனகாம்பரம், சாமந்தி என்று கொல்லைப்புறம் பூந்தோட்டமாய் பூத்து குலுங்கியது. கொய்யா, மாமரம் காய், கனிகளோடு அழகாய் காட்சி அளித்தது.எல்லாம் மருது அப்பா வைத்தவை. அவர் இல்லை என்றாலும் அவரது நிழலாய் இந்த செடிகளும், மரங்களும் அவரது ஞாபங்களோடு அந்த குடும்பத்திற்கு நன்மையை விளைவித்தது.

அப்போது சீனு வீட்டு தொலைபேசி ஒலித்தது. மிஸ்டர். சீனு உங்க மனைவிக்கு பிரசவ வலி வந்திருச்சு. சீக்கிரம் ஆஸ்பிட்டல் வாங்க...

சீனு ஆஸ்பிட்டல் விரைந்தான்.

சிறிது நேரத்திற்கு பிறகு... ஆப்ரேசன் தியேட்டரிலிருந்து டாக்டர் வந்தார். மிஸ்டர் சீனு உங்களுக்கு ஆண் குழந்தை பிறந்திருக்கு. ஆசை ஆசையாய் தன் குழந்தையை காண சென்றான்.

தன் அப்பாவை போலவே தன் மகனுக்கு முகச் சாயல் இருப்பதை கண்டு மகிழ்ந்தான் சீனு. சில மணிநேரம் கழித்து வெளியே செல்ல முற்படும் போது குழந்தை சீனுவின் விரல் பிடித்தது. தன் அப்பாவே தனக்கு மகனாய் திரும்ப பிறந்ததாய் உணர்ந்தான் சீனு.

உண்மையான உறவுகள் என்றுமே அழி வதில்லை. ஏதோவொரு ரூபத்தில் மீண்டும், மீண்டும் நிழலாய் தொடர்ந்து கொண்டே இருக்கும்.

உணர்வும் எழுத்தும்

**நௌஷாத் கான். லி** (அபுதாபிலிருந்து)
கும்பகோணம்

# உணர்த்தியது காதலின் ஏமாற்றம்

**சோகங்களாய் பயணித்த**
**என் வாழ்க்கையில்**
**இன்பங்களாய் பூத்த**
**மலர்கூட மௌனமாய்**
**என்னை கொல்லுகின்றன...**

**கற்பனையில் வரைந்த உன்னை**
**சிற்பமாய் பார்த்ததும்**
**கண்ட கனவுகூட**
**காரணம் இன்றி மரணிக்கின்றது**
**என் கனவு செய்த துரோகத்தால்...**

**உணர்த்தியது காதல் கல்லறையில்**
**புல்வெளிகூட முளைக்காது என**
**இன்று...**

**விசித்திரமாய் பார்த்த**
**உள்ளங்கள் கூறுகின்றன**
**என் காதல்**
**சரித்திரத்தில் கூட**
**இடம் பெறவில்லையாம்.**

**வாசலில்**
**வாசம் இன்றி பூத்த**
**பூக்கள் கூட**
**வேசமாய் விம்பம் தந்து**
**என்னை ஏமாற்றுகின்றன...**

**கற்பனைக் காதலும்**
**காலங்கள் மறந்து போர் தொடுக்கும்**
**தோள் கொடுக்க நீ இல்லாத போது...**

**உண்மைகளைப் பேசிய உள்ளம்**
**ஊமையாய் நீ**
**என்னை உதாசினப்படுத்தியதும்**
**உபதேசம் செய்யாது**
**ஊமையாய் ஊர் எங்கும்**
**ஓடுகின்றது உன்னால்...**

**பொத்துவில் அஜ்மல்கான்**
**இலங்கை.**

மருதாணி பூசிய
கைகளை விட
அதை தாங்கிபிடித்த
கைகளுக்கு தான்
வலிகள் அதிகம் ...
அதனால் தான்
அங்கெல்லாம் சிவப்பாக
சிவந்து கிடக்கின்றன ......!!

தேடிக்கொண்டிருக்கிறேன்
தோகையிழந்த மயிலை
ஒற்றை மயிலிறகின்
வலியோடு .......!!!!!

ச.இராஜ்குமார் திருப்பத்தூர்

## இனி

காற்று
தன் அலகுகளால்
தலையினை
துளைத்தபடி
எதையோ தேடியது.

கிடைத்ததை சப்பி தின்று
தூர எறிந்தது.
அவைகள் சுவரில் ஒட்டிக்கொண்டது
என் கவிதைகளாய்.

மீதமிருந்த உடலை
என்ன செய்யலாம் என்று தீர்மானித்த
பொழுதின் முடிவாய்
கட்டித் தொங்கவிட்டு
தற்கொலை என்றெழுதியது.

இனி
கவிதை எழுதாபொழுதுகள்
அவர்களுக்காய் விடியும்.

முல்லை அமுதன்



## நரகத்தின் வாசலில் சுகபோகங்கள்

அறையப்பட்ட சிலுவையிலிருந்து
வடியும் தேனில் பாவப் பூச்சிகள்
சுத்தமான ஆத்மா
நரக உலகின்னுள் போகிறது
கருடபுராண கதைகள் அனுபவிக்க!

உள்ளுறங்கும் வைரம் தீட்டத் தீட்ட
வெள்ளிபோல் மின்னும்
பளபளப்பாகிறது உயிர்!

எல்லா தருமமும் இது உட்பட
என்றளித்த கர்ணனாக
எல்லாப் பாவமும் கொன்று
அழிக்கிறது நரகம்
புடம் போட்ட தங்கமாய் உயிர்!

எப்போதோ செய்த நற்கர்மம்
பூ முட்டைக்குள் புகுகிறது
அவரவர் செய்வினைப் படி
மீண்டும் புவி நரக வாசலில்
சுகம் அனுபவிக்க!

தாயின் கருவறை சொர்க்கத்தில்
பத்துமாதம் சுகவாழ்க்கை
மீண்டும் பயணம் நரகம் நோக்கி
காலச் சுழற்சியில்
அண்டம் பிண்டம் அணு எல்லாம்
சுகச்சுற்றாகி சுழன்று நிற்கிறது!

ந. பாண்டியராஜன்

# தீராத கேள்வி

ஆகச்சிறந்த நண்பர்களான
நம்மை
நட்பில் சிறந்தவர் யாரென்றுத் தீர்மானிக்க
எவ்விதப் பாதுகாப்புமற்ற
கொலைக்கருவிகள்
நிரம்பிய அறைக்குள் அடைத்திருக்கிறார்கள்.

நாமிருவரும் வஞ்சனையின்றி
கொலைக்கருவிகளுடன்
விளையாடிக் கொண்டிருக்க...
என் கை நழுவிய கத்தி
என் கால் விரலைத் துண்டிக்க வழிகிறது
ரத்தம்.
என்னைக் காப்பாற்ற
முனைந்த உனக்கு
கூர்மைப் பளபளக்கும் குத்தீட்டி
உன் புஜத்தில் தைத்ததில்
வழிகிறது ரத்தம்.
நாமிருவரும் மாறிமாறி
நம் காயங்களுக்கு
நட்பின் மருந்திட்டுக் கொள்கிறோம்.
காலஅவகாசம் முடிந்ததும்
மூடிய நம் அறைக்கதவு திறக்கப்படுகிறது.

நம் நட்பின்
ஆழம் காணத்துடித்த அம்மனிதர்கள்
அறைக்குள்
வேகமாய் நுழைகிறார்கள்.

நம்மைக் காயங்களுடன் கண்டவர்கள்
காயங்களின் காரணத்தை
ஆய்ந்து நோக்க கதியற்றவர்களாய்
ஆகச்சிறந்த
நம் நட்பை ஏளனம் செய்கிறார்கள்.
நம் நட்பின் பந்தமறிந்த கொலைக்கருவிகள்
அதுவரை
செறிக்கப் படாமல் வைத்திருந்த
ரத்தத்தை
பளபளக்கும் அதன் கூரிய நாவுகளால்
சீற்றத்துடன் கக்கத்தொடங்குகிறது.

அறை முழுவதும்
ரத்தத்தால் நிரம்பி வழிய
நம் நட்பைச் சோதிக்க விழைந்த
அவசியமற்ற அம்மனிதர்கள்
அகக்காயங்களுடன்
ரத்தத்தில் மூழ்கியும் மிதந்தும் கொண்டிருக்க
அவ்வதையும் அச்சங்கடமும்
அவர்களுக்கு அவசியமென்றும்
அவ்விகாரத்தை பார்க்க மனமின்றியும்
கொலைக் கருவிகள்
நிரம்பிய அறைக்கதவினை
இறுக மூடிவிட்டு
நானும் என் நண்பனும்
நட்பின் இலக்கணம் சிதையாமல்
அங்கிருந்து புறப்படலானோம்.

- பாரியன்பன்

# காதலின்றி உலகே இல்லை



இளமையின்றி காதல் இல்லை !
காதலின்றி உற்சாகம் இல்லை !
உற்சாகமின்றி உழைப்பு இல்லை !
உழைப்பின்றி சிக்கனம் இல்லை !
சிக்கனமின்றி சேமிப்பு இல்லை !
சேமிப்பின்றி சொகுசு இல்லை !
சொகுசின்றி முதுமை இல்லை !
முதுமையின்றி அனுபவம் இல்லை !
அனுபவமின்றி வளர்ச்சி இல்லை !
வளர்ச்சியின்றி நாடு இல்லை !
நாடின்றி உலகம் இல்லை !
உலகமின்றி காதலே இல்லை !

புதுநகர் செல்லதுரை



# தென்னம் பிள்ளை

எல்லாவற்றையும் பணத்துக்காகச் செய்யத் தொடங்கினால், பணம் இருக்கும் மனிதர்களே இருக்க மாட்டார்கள். எல்லாவற்றையும் பெருமைக்காகச் செய்யத் தொடங்கினால், பெருமை நிலைக்கும் மனித வாழ்வு நிலைக்காது. சின்னஞ்சிறிய செயலையும் அன்புவழிப்பட்டு செய்தால், உடல் அழிந்த பிறகும் பெயர் நிலைக்கும், சந்ததி தழைக்கும்.

நமது பல்லாயிரம் ஆண்டுகால மரபில், வேளாண்மையை முழுத் தொழிலாக நம் முன்னோர் செய்ததே இல்லை. உணவு படைக்கும் துறை என்பதால், வேளாண்மையில் வணிக நோக்கம் மிகக் குறைவாகவும், பொது நோக்கம் கூடுதலாகவும் இருந்தன. இதனால், இயற்கை விதிகளுக்குப் புறம்பான தொழில் நுட்பங்களை நம் முன்னோர் கையாளவில்லை.

நமக்கு ரசவாதம் தெரிந்திருந்தது. நம் சித்தர்கள் தாவரங்களில் இருந்து உலோகங்களைப் பிரித்து எடுத்தவர்கள்தான். ஒவ்வோர் உயிரினத்திலும் உள்ளீடாக இருக்கக்கூடிய உயிர்வேதி மூலக்கூறுகளைப் பற்றிய பாடம் நமக்கு நிச்சயமாகப் புதியது அல்ல . சுண்ணாம்புக் கீரை என்ற தாவரத்தில் சுண்ணாம்புச் சத்து (கால்சியம்) கூடுதலாக இருப்பது கிராமத்து மனிதர்களுக்கு நன்கு தெரியும். எந்த ஆய்வகத்திலும் அமிலங்களை ஊற்றி, நுண்ணோக்கிகளைக் குவித்து, இந்தத் தாவரத்தில் சுண்ணாம்புச் சத்து உள்ளது எனக் கண்டுபிடிக்கப்படவில்லை. நமக்கே உரித்தான மரபுவழிபட்ட மெய்யறிவின் விளைவாகக் கிடைத்த கொடைகள் இவை.

பிரண்டை மற்றும் குப்பைமேனித் தாவரங்களைப் பற்றி, நவீன மருத்துவத் துறை இப்போது பக்கம் பக்கமாக எழுதுகிறது. இவற்றின் உள்ளீடாக உள்ள உலோகங்களையும் வேதிப்பொருட்களையும் பாடல்களில் எழுதி வைத்து, சீடர்களுக்குக் கற்றுத்தந்தவர்கள் நம் முன்னோர்.

தாவரங்களின் உள்ளிருக்கும் வேதிப் பொருட்களையும் உலோகங்களையும் புரிந்துக் கொண்டு அவற்றின் இயற்கையான குணங்களைச் சிதைத்து விளைச்சலை உயர்த்தும்

பொருளாதார நடவடிக்கையில் நம் முன்னோர் இறங்கவில்லை . ஒருவர் கொலை செய்யாமல் இருப்பதால், அவருக்கு வீரம் இல்லை என்று பொருள் அல்ல. நமது மரபில் வேளாண் தொழில்நுட்பங்களில் வேதிப்பொருட்களை ஈடுபடுத்தவில்லை என்பதால், நம் முன்னோர் அறியாமையில் வாழ்ந்தனர் என்று பொருள் அல்ல.

பன்னாட்டுக் குளிர்பானங்களின் நச்சுப் பிடியில் மக்கள் சிக்கத் தொடங்கியபோது, இயற்கை ஆர்வலர்கள் இளநீரை முன்வைத்தனர். இளநீரின் சத்துக்கள் மற்றும் சிறப்புகள் குறித்த பரப்புரைகள் வேகமாக அரங்கேறின. மாநகரங்களில் இளநீர் பருகும் வழக்கம் தேவைக்கு அதிகமாக உயர்ந்தது. நவீனர்களின் சொற்களில் கூறவேண்டுமானால், இளநீர் உற்பத்தியில் பணம் கொழிக்கத் தொடங்கியது. இளநீர் ஏற்றிய வாகனங்கள், நகரங்களிலும் மாநகரங்களிலும் ஆயிரக்கணக்கில் வலம் வந்தன. நம் நாட்டில் இவ்வளவு இளநீர் இயற்கையான முறையில் விளைய வாய்ப்பு இல்லை. இதற்காக உயர் விளைச்சல் தென்னை நாற்றுகள் களம் இறக்கப்பட்டன. இந்த நாற்றுகளால், பூச்சிகளை, நோய்களைத் தாக்குப்பிடித்து வளர முடியாமல்போனது. மோசமான நோய்கள், வழக்கத்தைவிட அதிகமான வண்டுகள், பூச்சிகளின் தாக்குதல் போன்றவற்றால் தென்னந்தோப்புகள் நலி வடைந்தன.

பணம் கொட்டும் தொழிலாக ஒருபக்கம் இளநீர் மாறிவிட்டது. மறுபக்கம், தென்னை மரங்கள் நோயுற்று வாடின. இந்த நெருக் கடியைச் சமாளிக்க, நம் வேளாண் சமூகம் கையாளும் இரக்கமற்ற செயல்களில் மிகச் சிலவற்றை மட்டும் இப்போது பகிர்ந்துகொள்கிறேன்.மோனோகுரோடோபாஸ் (monocrotophos) எனும் நஞ்சு, அமெரிக்காவிலும் வேறு பல நாடுகளிலும் தடைசெய்யப்பட்டுள்ளது. காரணங்களை விளக்கினால், குலைநடுக்கம் வரும். அதன் சுருக்கத்தைக் குறிப்பிடுகிறேன். ‘நம் உடலில் நரம்பு மண்டலத்தைச் சிறப்பாக இயக்கும் சுரப்பிகளில் ஒன்று கோலினெஸ்டெரேஸ் (cholinestérase) என்பது. மோனோகுரோடோபாஸ் நஞ்சுகள் இந்த கோலினெஸ்டெரஸ் சுரப்புகளை முடக்கிவிடுகின்றன. இதன் விளைவாக, நரம்பு மண்டலம் பதற்றமடைகிறது. திடீரென உடல் ஆட்டம்கொள்ளுதல், அதிவேக மாக மூச்சுவாங்குதல், துடித்தல், வெட்டி இழுத்தல், வலிப்பு வந்து துடித்தல், படபடப்பு, கட்டுப்படுத்த இயலாத நடுக்கம் போன்ற அறிகுறிகள் தோன்றி துடித்துச் செத்துவிழுதல் நிகழும் வாய்ப்பை மோனோகுரோடோபாஸ் உருவாக்குகிறது. `தாவரங்களில் உள்ள பூச்சிகளும் வண்டுகளும் இவ்வாறு செத்துவிழ வேண்டும் ‘என்பது நவீன மேதைகளின் கண்டுபிடிப்பு.

சின்னஞ்சிறு உயிரினங்களை இவ்வளவு குரூரமாகக் கொலைசெய்வது பாவம் அல்லவா? என்ற அறச்சிந்தனை நம்மிடம் இருந்திருந்தால், இந்த நஞ்சு தொடக்கத்திலேயே விரட்டியடிக்கப்பட்டிருக்கும். `உற்பத்தி உயர வேண்டும். பணம் கொழிக்க வேண்டும் ‘என்ற எண்ணத்தோடு செயல்பட்டதன் விளைவாக, இப்போது தென்னைமரங்களின் உயிர்நாடியாக மோனோகுரோடோபாஸ் கலந்த நஞ்சுகள் மாறிவிட்டன.

தொடக்கத்தில் தென்னைக் குருத்துகள் மீது இந்த நஞ்சைத் தெளித்தார்கள். இப்போது, ஒரு நெகிழிப் பையில் நஞ்சை ஊற்றி நீர் கலந்து, தென்னைமரத்தின் வேர்களைச் சீவிவிட்டு அவற்றில் கட்டிவிடுகிறார்கள். நெகிழிப் பையில் உள்ள நஞ்சு, ஒரு மணி நேரத்தில் முழுதாக தென்னை வேர்களால் உறிஞ்சப் படுகிறது. இந்தச் செயல்முறையின் வழியாக, மரம் முழுவதும் நஞ்சாக மாற்றப்படுகிறது. வேர்கள், நிலத்தில் இருந்து நீரை உறிஞ்சி இளநீருக்கு வழங்குகின்றன. அந்த இளநீர் நமக்கு அருமருந்தாக இருந்தது. வீடுகளில் கறிவேப்பிலைச் செடி வளர்ப்போர், அந்தச் செடிகளின் வேரில் தயிர் ஊற்றுவது நமது கிராமங்களில் இருந்த வழக்கம் . தயிரை வேர்கள் உறிஞ்சினால், கறிவேப் பிலையின் மணம் கூடுதலாக இருக்கும். வேர்களுக்கும் நமக்குமான உறவை நம் சமூகம் புரிந்துகொண்ட விதம் இதுதான். அது நவீனச் சிந்தனை இல்லாத `மூடர்களின் ‘காலம். இது பகுத்தறிவும் நவீனக் கல்வியறிவும் செழித்து வளர்ந்துள்ள காலம்.

உழவனின் நெஞ்சக் கழனியில்
உற்றுப் பார்க்கிறேன்
அங்கே
கவலைப் பயிர்கள்
செழித்திருக்கிறது
கண்ணீரில்...

**- சுசிமணாளன்**

*தமிழ்ப்பட்டறை முதல் ஆண்டு விழாவில் சுசிமணாளன் ‘‘தமிழ்ப்பட்டறை’’ விருதினைப் பெறுகிறார்.*



*விருது வழங்குவர் நிர்வாக குழு முனைவர் திருமதி கோமதி கேசவன் அவர்கள். அருகில் ஐயா பாவலர் கருமலைத் தமிழாழன் வலதுபுறம் ஐயா ராஜகோபால் சுந்தரம் தமிழ்ப்பட்டறை மூத்த ஆலோசகர்*

அதனால், வேரில் நஞ்சு ஊற்றுகிறார்கள்.

வேர்களில் மோனோகுரோ டோபாஸ் நஞ்சைக் கட்டிய பிறகு, `இரு மாதங்களுக்கு அந்தத் தென்னையில் இருந்து காய், இளநீர் எதையும் பறிக்கக் கூடாது ‘என்ற கட்டுப்பாடு வேளாண் துறையினரால் விதிக்கப்பட்டுள்ளது. வேறு பல நஞ்சுகளும் தென்னை வேரிலும் தண்டிலும் செலுத்தப்படுகின்றன. அவற்றைச் செலுத்தினால், ஆறு மாதங்களுக்கு காய் பறிக்கக் கூடாது. கூர்மையான ஆயுதங்களைக் கொடுத்துவிட்டு, `வலிக்காமல் குத்த வேண்டும், ரத்தம் சிந்தாமல் அறுக்க வேண்டும் ‘என்பது போன்ற உபதேசங்களை அந்த ஆயுதங்களின் மேல் அச்சிட்டு விற்பனைசெய்வது நவீன அறிவாளிகளின் நேர்மை .

தென்னையில் நிகழும்` பசுமைப் புரட்சி’ மோனோ குரோடாபாஸுடன் முடியவில்லை. சல்ஃபோனமைடு (sulfamides) எனும் வேதி நஞ்சுக்கான மாத்திரைகளை தென்னைமரத்தில் பதிப்பது, வேளாண் துறையில் அரங்கேறும் மற்றொரு புரட்சிகரத் தொழில்நுட்ப நடவடிக்கை. தென்னையின் குருத்துகளில், பாளைகளில் இருக்கும் வண்டுகளை அழிப்பதற்காக சல்ஃபோனமைடு நஞ்சு வில்லைகளைப் பயன்படுத்துகிறார்கள். தென்னைமரத்தின் தண்டுப் பகுதியில் ஒரு துளையிட்டு அதன் உள்ளே மாத்திரைகளைப் பதித்து, அந்தத் துளையை சிமென்டால் அடித்துப் பூசிவிடுவது இந்தத் ‘தொழில்’நுட்பம். இவ்வாறு செய்த சில நிமிடங்களில், தென்னைமரத்தின் உச்சியில் இருந்து வண்டுகள் செத்து விழும் என்று பரவலாகப் பேசிக்கொள்ளும் அளவுக்கு வீரியமிக்கது சல்ஃபோனமைடு நஞ்சு .

சல்ஃபோனமைடு மாத்திரைகள் பதிக்கப் பட்ட தென்னைமரங்கள் செத்து, இற்று விழத் தொடங்கும் நிலை இப்போது உருவாகிவிட்டது. புரிகிறதா உங்களுக்கு? தன் மீது திணிக்கப்பட்ட நஞ்சுகளின் அளவைத் தாள இயலாமல், அவ்வளவு கம்பீரமான தென்னைகளே செத்துக்கொண்டுள்ளன.

கொப்பரைத் தேங்காய்க் கிடங்குகளிலும் பசுமைப் புரட்சியின் எண்ணற்ற செயல் பாடுகள் நிகழ்கின்றன. அவற்றில் முக்கியமான தொழில்நுட்பம் ஒன்றைத் தெரிந்து கொள்ளுங்கள்.

கொப்பரைத் தேங்காய் என்றால், எண் ணெய்த் தன்மையுடன் உள்ள முற்றிய, காய்ந்த தேங்காய். கிடங்குகளில், கொப்பரைத் தேங்காய்கள் குவியல் குவியலாகக் கொட்டி வைக்கப்பட்டிருக்கும். நாளடைவில் ஈரப்பதம் உருவாகி, தேங்காய் மீது கருமை படியத்

தொடங்கும். அதாவது, தேங்காய்கள் மீது கறுப்பு வண்ணத்தில் பூஞ்சைகள் வளரும். இந்த நிலையில், தேங்காய்களை வெயிலில் காயவைத்தால், பூஞ்சைகள் கட்டுப்பட்டுவிடும். இந்த நவீனப் புரட்சிக் காலத்தில் வெயிலில் உலர்த்துவது, பழைமையான, முட்டாள்தனமான அல்லது நடைமுறைக்கு ஒவ்வாத தொழில்நுட்பம் அல்லவா! அதனால், கந்தகம் அடங்கிய வேதி நஞ்சுகளை (Sulphar) கொப்பரைக் கிடங்குகளில் பயன்படுத்துகிறார்கள்.

பெரிய வட்டமான இரும்புச்சட்டியில் நெருப்புத் துண்டுகளை நிரப்பி, அதில் கந்தக மாத்திரைகளைப் போட்டு, சட்டியை சல்லடை போன்ற இரும்பு மூடியால் மூடினால், மிக அதிக அளவில் புகை வரும். கொப்பரைத் தேங்காய்க் குவியலை ஒரு தார்ப்பாயால் மூடிவைத்து, அதன் உள்ளே கந்தகப் புகைகொண்ட சட்டியை வைத்துவிடுகிறார்கள். தீயுடன் சேர்ந்த கந்தகப் புகை மிக வீரியமான உயிர்க்கொல்லி. இவ்வாறான கந்தகப் புகையில் மூட்டம் போடப்பட்ட தேங்காய்கள் கருமை நிறம் நீங்கி , பளிச்சென்ற வெண்மை நிறத்தில் இருக்கும்.

இந்தக் கால பொதுச் சமூகத்துக்கு, வெண்மை நிறம் மிகவும் பிடித்தமானது அல்லவா? சமூகத்தின் தேவைகளை நிறைவேற்றுவதுதானே, நவீன அறிவியல் துறையின் ஒரே ஒரு குறிக்கோள்! கந்தகத் தேங்காய்களில் இருந்து எண்ணெய் பிழிந்த பின்னர், அந்தத் தேங்காய் எண்ணெயும் வெண்மை நிறத்தில் உள்ளது. உண்மையான / இயற்கையான தேங்காய் எண்ணெய், மங்கலான பழுப்பு வண்ணத்தில்தான் இருக்கும்.

`தென்னைமரத்தின் உச்சியில் ஏறிய குரங்குகள், தேங்காய்களைப் பறித்து இளநீர் பருகிவிட்டு, அங்கு இருந்து தாவி அருகே இருந்த பாக்கு மரங்களில் இறங்கின. பாக்குக் கொட்டைகளை மென்றுவிட்டு, கீழே இருந்த பலாமரத்தில் குதித்தன. பலாப்பழங்களைச் சிதைத்து உண்ட அந்தக் குரங்குகள், அருகே இருந்த வாழைமரங்கள் மீது இறங்கின. செழித்துப் பழுத்திருந்த வாழைப்பழங்களைத் தின்றுவிட்டு, அருகே இருந்த குளத்தில்

## நீர்க்குமிழி



வளிமண்டலத்தின் ஒரு
சிறுபகுதியைத் தன்னுள்
சிறை பிடித்து விட்ட,

அகம்பாவத் திமிருடன்
நீர்வெளியின் மேற்பரப்பில்
ஆணவமாய் அலைந்து
கொண்டிருக்கிறது..


“எப்பொழுது வேண்டுமானாலும்
உடைந்து போகலாம்”
என்கிற உண்மை உணராமலே..!

- ஆ. மகராஜன், திருச்சி

## ஹைக்கூ கவிதைகள்...

**அனாதை இல்ல**
**வளாகத்தினுள் மரங்கள்**
**குருவிக்கூட்டில் சிணுங்கல்கள் -**

**பாட்டுப் புத்தகம்**
**புரட்டி இசைக்கும்**
**மின்விசிறி -**



**கோடை காலம்**
**நீரூற்றிய பூந்தொட்டியில்**
**நிலா -**

**சோம்பேறி இளைஞன்**
**கால் மீதேறும் எறும்பின்**
**வாயில் சோற்றுப்பருக்கை -**

**கடையில் மின்தடை**
**விற்கும் பொம்மைகளிலொன்று**
**சுற்றுகிறது நெகிழிக்காற்றாடி -**

**சிக்கல்**
**பிரிக்கும் வேலையில்**
**ஊசி -**

**பானால் சாயிராம். தஞ்சாவூர்.**

குதித்து நீந்திக் கரையேறின 'என்பது நமது சங்கப் பாடல்களில் உள்ள அந்தக் காலத்துத் தோட்டங்களின் காட்சி . கலித்தொகை, சீவகசிந்தாமணி ஆகிய தொகுப்புகளில், இவ்வாறான அடுக்குமுறைத் தோட்டங்களின் விவரணைகள் சிறப்பாகப் பதியப்பட்டுள்ளன.


தென்னையின் வேரில் நெகிழிப் பையுடன் நச்சுநீர், தண்டுப் பகுதியில் சிமெண்ட் பூச்சுடன் நச்சு மாத்திரைகள், பாளைகளில் நச்சுக் குருணைகள், தென்னையின் கீழே வெட்டப் பட்டுள்ள குழிகளில் பிராய்லர் கோழிப் பண்ணைக் கழிவுகள் . இதுதான் இப்போதைய தோட்டங்களில் காட்சிப் பதிவு. இவ்வளவுக்கும் பிறகு வந்து சேரும் இளநீரையும், தேங்காய்களையும், எண்ணெயையும்தான் இந்தச் சமூகத்தில் வாழும் கோடிக்கணக்கான மனிதர்கள் உணவாக உட்கொள்கின்றனர்.

தீயுடன் இணையும் கந்தகம் மற்றும் மோனோகுரோடாபாஸ், சல்ஃபோனமைடு நஞ்சுகள் எல்லாம், தென்னைப் பொருட்கள் வழியாக இந்தச் சமூகத்தில் அன்றாடம் பரவிக்கொண்டுள்ளன. இவற்றைக் கண்காணிக்க எந்த ஏற்பாடும் இல்லை; கட்டுப்படுத்த எந்த வழிமுறையும் இல்லை; தடுக்கும் சிந்தனையோ துளிகூட இல்லை.

உண்மை என்னவென்றால், இவற்றை இனி கட்டுப்படுத்தவோ, ஒரேயடியாக ஒழிக்கவோ இயலாது. வேதிப்பொருட்களைத் தடைசெய்தால், இப்போதைய விவசாயிகளில் பெரும்பாலானோர் விவசாயத்தில் இருந்தே விலகிச் செல்வார்களே தவிர, உடனடியாக மரபுமுறைக்குத் திரும்ப மாட்டார்கள். ஏனெனில், கடந்த 60 ஆண்டுகால பசுமைப் புரட்சியின் விளைவாக, அவர்களது மனங்களும் நிலங்களும் பக்குவம் இழந்துவிட்டன.

தென்னைச் செடிகளை, நம் மரபு `தென்னம் பிள்ளை 'என அழைத்தது. பணத்துக்காகவும் வேறு பல போலித்தனங்களுக்காகவும் `பிள்ளைகளைப்' பலியிடும் காலம்தானே இது!

செய்தி: ம.செந்தமிழன்
நன்றி: கு.புகழேந்தி திரு



# கவிதைக் காய்ச்சல்

இருமல்வந்தால் சளிபிடித்தோன் என்னசெய்வான்?
இருப்புகொள்ள முடியாமல் இருமித்தீர்ப்பான்.
கவிதைவந்தால் எந்தனுக்கும் அப்படித்தான்
காகிதத்தில் ஏற்றுமட்டும் அமைதியில்லை.
காரோட்டும் பொழுதினிலே கவிதைவந்தால்
ஓரத்தில் நிறுத்தும்வரை பொறுமையில்லை.
ஒருபோதும் ஒலிப்பதிவான் மறப்பதில்லை.
இருந்தாலும் நடந்தாலும் உறங்கினாலும்
எழுப்பிவிடும் என்கவிதை இரக்கமின்றி.
நிமிர்ந்தாலும் குனிந்தாலும் நீருக்குள்ளே
நீந்துகின்ற போதுமெனைச் சிறைபிடிக்கும்.
கவிழ்ந்தலே திரும்புதற்கு இயலாச் சின்ன
குழந்தைநிலை தானெனக்கும் கவிதைக்குள்ளே.

கொழுந்தாக இருக்கின்ற கோடைவேம்பு
குபுக்கென்று பூத்துக் குலுங்கல்போல,
இருந்தாற்போல் இருந்திட்டு இடியைக்கொட்டி
ஏராள மழைபொழியும் மேகம்போல,
மருந்துக்கும் கிட்டாத காளான்கூட்டம்
மறுகலை கோடிகுடை விரித்தல்போல,
பறந்துவரும் பைங்கிளிகள் மொய்த்தல்போல
பாடலெனைத் தேடிவந்து படையெடுக்கும்.
ஒருநொடிதான் பொறுத்திருப்பாய் என்றால்கூட
ஓயாது அடம்பிடிக்கும் குழந்தைபோல.

மருந்துக்கு வைத்தியர்கள் யாருமில்லை
மந்திரங்கள் தாயத்து ஏதுமில்லை
பத்தியங்கள் லேகியங்கள் படுக்கை, புச்சு
பலவகையில் முயன்றாலும் பலனேயில்லை
சிற்றெறும்பு ஒருகோடி ஒன்றாய்க்கூடி
சிறுமூளைக் குள்ளிருந்து போர்தொடுக்கும்
சிலநேரம் ஏடெடுத்து எழுத்தித் தீர்த்தும்
செயலிழக்க மறுக்குமெந்தன் கவிதைக்காய்சல்.

பன்மொழிப் பேராசான் **சக்திப்புயல்**

# உடையாத நீர்க்குமிழி

பாவலர் கருமலைத்தமிழாழன்

படிதாண்டாப் பத்தினியாய் அடுப்புக் குள்ளே
பகலிரவும் அடியாளாய்ப் பணிகள் செய்தே
அடிவுதைகள் ஏளனங்கள் பட்ட போதும்
அழுகையினைத் துயரத்தை விழுங்கிக் கொண்டு
கடிவாளக் குதிரையாகச் சுமையி ழுத்துக்
கல்லெனினும் புல்லெனினும் கணவன் என்றே
படிப்பின்றி இருந்தநிலை மாறிப் போகப்
பட்டத்தால் பகுத்தறிவு பெற்றா லின்று !

எண்ணத்தில் வலிமையின்றி இருந்த பெண்ணோ
எழுச்சிப்பா பாரதியின் புதுமைப் பெண்ணாய்க்
கண்ணீரைச் சிந்திமூலை அமர்ந்தி ருந்த
காட்சிமாற்றி எழுந்திட்டாள் துணிச்ச லோடே
தண்ணீரில் எதிர்த்துநீந்தும் மீனைப் போலத்
தரையினிலே அடக்குமுறை எதிர்த்து வென்று
விண்மீதில் பறக்கின்றாள்! விவேகத் தோடு
விதைக்கின்றாள் சாதனைகள் துறைகள் தோறும் !

தட்சணையால் முதிர்கன்னி ஆன தெல்லாம்
தகர்த்தெறிந்து எதிர்வினாவால் பணிய வைத்தாள்
பட்டுக்கும் பொன்னுக்கும் கையை ஏந்திப்
பணிந்தநிலை மாற்றிபணம் ஈட்டு கின்றாள்
கட்சிக்கும் ஆட்சிக்கும் தலைமை ஏற்றுக்
கண்வியக்க அதிகாரம் செலுத்து கின்றாள்
கட்டுடையும் நீர்க்குமிழி போலி ருந்த
காலம்போய் உடையாத குமிழி யானாள் !



# நூல் வெளியீட்டு விழா

## வெலிவிட்ட ஏ. சீ. ஜரீனா முஸ்தபா

ஸாகிரா டீச்சரின் உள்ளத்தில் குடியிருந்த வலியும், குழப்பமும் இன்னும் முற்றாகத் தணியவில்லை. அதிலிருந்து முழுமையாக விடுதலை பெற முயற்சிக்கிறாள். அதுவும் அவளால் முடியாமல் இருந்தது.

அவளது நூல் வெளியீட்டு விழாவுக்கு இன்னும் ஒரு சில தினங்களே பாக்கி இருந்தன. அதற்குள் அவளது இல்லத்தை வந்தடைந்த ஒரு கடிதம் அவளது உள்ளத்தை மிகவும் காயப்படுத்தியது. இன்னும் எதிலும் நிம்மதியாக ஈடுபட முடியாத அளவுக்கு வேதனை அவளை ஆட்கொண்டிருந்தது.

இன்னும் யார் யாருக்கு அழைப்பிதழ் அனுப்ப பாக்கியுள்ளது என ஒருமுறை பரீட்சித்துக் கொண்டாள். எல்லாம் அனுப்பிவிட்டதாக உள்ளம் முடிவு செய்தாலும் ஏதோ ஓர் உணர்வு அவளது திருப்திக்கு தடையாக இருப்பதை அவளால் உணர முடிந்தது.

அது என்ன? அது என்ன?

ஆம்! அந்த கடிதம் தான்!

அது ஒரு முகவரி இல்லாத கடிதம், மொட்டைக் கடிதம்.

யாருக்கு என்ன தேவை வந்தது. அப்படி ஒரு கடிதம் எழுத?

யார் அதனை எழுதி இருப்பார்? ஏன்? எதற்காக எழுதி இருப்பார்கள்?

அவளால் எதையும் யூகித்துப் பார்க்க முடியவில்லை. ஆனால் அந்த எழுத்துக்களை இதற்கு முன் கண்டிருப்பதாக ஞாபகம். யாருடையது என இன்னும் நினைவுக்கு வரவில்லை.

இப்படியான குழப்பங்கள் அவளது பணிகளுக்கு இடையூறு விளைவித்தன. இலக்கியம் – என்பது அவளது நீண்ட கால பயணிப்பு. அவளது கணவர் உயிரோடு இருக்கும் போதே எப்படியாவது ஒரு நூலை தொகுப்பாக வெளியீடு செய்ய வேண்டுமென்று அவள் மிகவும் முயற்சி செய்தாள். ஆயினும் முடியாமலேயே போய் விட்டது. அவரது மறைவுக்குப் பிறகு அவளது பெரு முயற்சிகளினாலும் இலக்கிய நல்லிதயங்களின் துணையோடு மூன்று நூல்களை ஒரே நேரத்தில் வெளியீடு செய்து, வெளியீட்டு விழாவையும் மிகச் சிறப்பாக செய்து முடித்தாள்.

அவளுக்கு அது ஒரு வெற்றி விழாவாக அமைந்தது. அதில் கிடைத்த அன்பளிப்புக்கள் அனைத்தையும் தனது அன்புக் கணவரது பெயரிலே தர்மம் வழங்கி விட்டதில் முழுமையான மன நிறைவை அடைந்தாள்.

அதில் கிடைத்த உற்சாகம் மேலும் அவளை எழுதத் தூண்டியது. அந்த தூண்டுதலுக்கு பல நல்ல நட்புக்களும் காரணமாக அமைந்தன. அது மாத்திரமின்றி பல வருடங்களாக நோயினால் பாதிப்படைந்திருந்த அவளது கணவர் நிஸாம்

ஹாஜி வீட்டிலேயே முடங்கி விட்டதால் அவள் தனது ஆசிரியை தொழிலையும் விட்டுவிட்டு தனது கணவரை பராமரிக்கத் தொடங்கி விட்டாள். அவர்களது இரண்டு மகன்களும் நன்றாக படித்து நல்ல நிலைக்கு வந்துவிட்டதால் அவர்களுக்கு பொருளாதார சிக்கல்கள் எதுவும் இருக்கவில்லை.

கணவருக்கு ஒருநாள் நோய் அதிகமாக அவரை அவசரமாக தனியார் வைத்தியமனைக்கு அழைத்துச் சென்றார்கள். அவசர சிகிச்சை அளிக்கப்பட்டது. உடனடியாக இருதய சத்திர சிகிச்சை (பைபாஸ்) செய்தாக வேண்டுமென வைத்தியர் கூறியபோது இருவரும் அதிர்ந்து போனார்கள்.

அவளால் அழுகையை கட்டுப்படுத்த முடியவில்லை.

“உம்மா.. அழாதீங்க. நாங்க உடனே பைபாஸ் செய்ய ஏற்பாடு செய்வோம். வாப்பாவுக்கு எதுவுமே ஆகாது. நீங்க தைரியமாக இருங்க”

இப்படிக் கூறி ஆறுதல் படுத்தியதோடு மட்டுமல்லாமல் உடனடியாக அதற்குரிய ஏற்பாடுகளையும் செய்தான் அவளது இளைய மகனான பர்ஸாத். ஆயினும் அவர்களது எந்த முயற்சிகளுக்கும் பயனிருக்கவில்லை.

திடீரென அவரது மூச்சு அடங்கிப் போனது. இது ஒரு பேரதிர்ச்சி அவளுக்கு. அதிலிருந்து மீள்வது எளிதான விடயமல்ல.

திடீர் மறைவு! திடீர் இழப்பு! திடீர் தனிமை! திடீர் வெறுமை! எல்லாமாக ஒன்று சேர்ந்து அவளைப் பித்துப்பிடித்தவள் போல் ஆக்கிவிட்டது. உயிரில் பாதி கரைந்து விட்டதைப் போன்ற ஓர் உணர்வு. யாரிடம் சொல்வது அதையெல்லாம்?

வீட்டில் இருக்கவே பிடிக்கவில்லை. அவள் உறவுக்காரர்களின் வீடுகளில் போய் தங்குவது அவளது மகனுக்குப் பிடிக்கவில்லை. அதனால் அவனது கௌரவம் பாதிப்படைவதாக அவனது எண்ணம். அதைவிட மகனை கவனிக்க அவளை விட்டால் யாருமில்லையே என்ற கவலை அவளுக்கு. திருமணத்தை முடித்து அவனுக்கும் ஒரு துணைவியைத் தேடி வைத்தால் நிம்மதியடையலாம் என்று எண்ணி பல வரன்களைப் பார்த்து விட்டாள். அதுவரையில் எதுவுமே அவனுக்கு பிடிக்கவில்லை.

அடிக்கடி மன உளைச்சலுக்கு ஆளாகினாள். தனியாக வீட்டில் இருப்பதை தவிர்ப்பதற்காக வலது குறைந்த பிள்ளைகளின் பள்ளிக்கூடம் ஒன்றில் இலவசமாகப் பாடம் கற்பிக்கும் பணியில் இணைந்தாள். பல சமூக சேவைகளில் ஈடுபட்டாள். அடிக்கடி பயான் (போதனை) நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டாள். அதிகமாக தொழுகை இபாதத்துகளில ஈடுபட்டாள். மிகுதி நேரங்களில் நிறையவே எழுதினாள்.

அவளது தீவிர முயற்சியால் மீண்டும் ஒரு நூல் தயாரானது. பொது அறிவுக் களஞ்சியமாக. அதை மிகவும் கஷ்டப்பட்டே உருவாக்கினாள். அந்த நூலை வெளியீடு செய்ய பெருந்தொகையை முதலீடு செய்து, பல சிரமங்களின் மத்தியில் வெற்றி கண்டாள். அதற்கு ஒரு வெளியீட்டு விழா ஏற்பாடு செய்யப்பட்டது.


இந்த வேளையில்தான் அப்படி ஒரு மொட்டைக் கடிதம் வந்தது. அந்த எழுத்துக்களை எங்கோ கண்ட ஞாபகம். மீண்டும் பிரித்துப் படித்தாள்.

ஸாகிறா டீச்சர் சமூகத்துக்கு நீங்கள் மீண்டும் ஒரு நூல் வெளியீட்டு விழா செய்யப் போவதாக கேள்விப்பட்டேன். வயதான இந்த கடைசிக் காலத்தில் உங்களுக்கு ஏன் இப்படியான பேராசை?

இனிமேலாவது இந்த தேவையில்லாத வேலைகளை விட்டுவிட்டால் உங்களுக்குத்தான் நல்லது. இதை உங்கள் நன்மைக்குத்தான் சொல்கிறேன்.

இப்படிக்கு,

நலன்விரும்பி.



நூல் விலை *10 €*
*அனுப்பும் செலவுடன்.*

email:
editor@tamilnenjam.com


இக்கடிதத்தை படித்துவிட்டு மடித்து தனது கைப்பைக்குள் வைத்துக் கொண்டு புறப்பட்டாள். அவளுக்கு இதை யாரிடமாவது காட்ட வேண்டும் போல் தோன்றியது.

இலக்கிய நண்பியான நஸ்ரியாவின் இல்லத்திற்கு வந்தாள். அவளோடு நூல் வெளியீட்டு விழா குறித்து கலந்தாலோசித்ததில் உள்ளம் சற்று ஆறுதலைப் பெற்றது. அந்தக் கடிதத்தையும் நண்பி நஸ்ரியாவுக்கு காண்பிக்கத் தவறவில்லை.

"இது... இது... பரீனா டீச்சர்ட எழுத்துதான்"

"இருக்காது நஸ்ரியா அவ ஒரு பட்டதாரி டீச்சர். என் கூடவே இருக்கிறவ"

"கூட இருந்து குழி பறிக்கிறது இப்படித்தான் டீச்சர்!"

"எதுக்காக இப்படி செய்யனும், அவக்கும் எனக்கும் ஒரு பகையும் இல்லையே"

"பொறாமைக்கெல்லாம் பகை தேவையில்ல டீச்சர். ஒருத்தரோட வளர்ச்சி போதும். வளர்ச்சிங்களை பாத்து எல்லாராலயும் சந்தோஷப்பட முடியாது. அதே மாதிரி பொறாமைய கட்டுப்படுத்தவும் தெரியாது. எல்லை மீறிப் போன பொறாமையிட வெளிப்பாடு இப்படித்தான் இருக்கும்"

"என்னால நம்ப முடியல்ல நஸ்ரியா..."

''அவ நிறைய படிச்சிருக்கலாம். ஆனா அவளால இலக்கியம் செய்ய முடியாது. இந்த எழுத்தாற்றல் என்றது இறைவனால அளிக்கப்படுற ஒரு அற்புத வரம்"

இப்படி இன்னும் சிறிது நேரம் உரையாடிக் கொண்டிருந்துவிட்டு வெளியிறங்கி வந்தவளுக்கு அந்த ஞாபகம் வந்தது. அவளது ஒன்றுவிட்ட சகோதரியின் மகனான அன்ஸார் அந்த லேனுக்குள்தான் வசிக்கிறார். அவள் அவருக்கும் அழைப்பிதழ் அனுப்பியிருந்தாள். அவரின் இல்லத்திற்குச் சென்றாள். அவரது மகள்தான் எதிர்ப்பட்டாள்.

"அன்ஸாருக்கு நா அனுப்பின இன்விடேஷன் கிடைச்சதா மவள்?"

"ஓ... ஆன்ட்டி"

"வருவாருதானே"

"இல்ல ஆன்ட்டி, எங்களையும் போவ வேணாம்னு சொல்லிட்டார்"

"ஏனாம்"

"அந்த அழைப்பிதழ் கார்ட்ல யார் யாரோட பேரையெல்லாம் போட்டிருக்கீங்களாம். வாப்பாட பேர் மட்டும் போடலியாம். அவரை முக்கியமா நீங்க நினைக்கலியாம்"

"எனக்கு எல்லாரும் முக்கியம்தான் மவள் நான் போயிட்டு வாரன்" எனக் கூறிவிட்டு புறப்பட்டாள்.

''கொஞ்சம் இருங்க ஆன்ட்டி ஏதும் குடிச்சிட்டுப் போவலாம்"

இப்படி எப்போதும் சொல்கிறவள் இன்று ஒரு ஒப்புதலுக்காகவாவது சொல்லவில்லை.

இன்னும் பாக்கியிருந்த சில வேலைகளை முடித்துக் கொண்டு வீட்டுக்கு வரும்போது இரவாகி விட்டது. இன்னும் மகனைக் காணவில்லை. அதுவரை தொழுகையை முடித்துக் கொள்ளலாம் என்று எண்ணி வுழுச் செய்து தொழுகைக்கு தயாரான போது தொலைபேசி சிணுங்கியது. விரைந்து வந்து ரிஸிவரை காதில் பொருத்தி ஹலோ என்றாள்.

எதிர்முனையில் இருந்து பேசியது காதர் காக்காதான்.

"உங்களை நினைச்சா ரொம்ப பாவமா இருக்கு டீச்சர். உங்களுக்கு எதுக்கு இப்படியொரு தலையெழுத்து? எதுக்கு புஸ்தகம் எழுதி, வித்து கஷ்டப்படுறீங்க? உங்க இந்த வயசான காலத்துல உங்க புள்ளைங்க ரெண்டுபேரும் உங்களை கைவிட்டுட்டாங்களா? அவங்க உங்கள கவனிக்கிறதில்லையா?"

இந்தக் கேள்வி அவளை நிலைகுலைய வைத்தது. கண்ணீரை வரவழைத்தது. ஏற்கனவே உடைந்து போயிருந்தாள். இனியும் தாங்கிடத் திராணியில்லை.

"எதுக்கு இப்படி பேசுறிங்க காதர் காக்கா. ஏண்ட தேவையெல்லாம் செய்றது அவங்க ரெண்டுபேரும்தானே"

மிகுந்த வேதனையோடு பேசிக் கொண்டிருந்தவளின் நெஞ்சுக்குள் ஏதோ அடைத்தது. தலை சுற்றியது. கண்கள் இருண்டன. உணர்விழந்து தரையில் சரிந்தாள்.

கண்களை திறந்தபோது வைத்தியசாலையில் இருந்தாள். மகன் அருகில் நின்றார்.

"உம்மா நீங்க ரொம்பவே பலவீனமடைஞ்சு இருக்கிறதா டொக்டர் சொல்றார். ரொம்பவும் களைச்சுப் போயிருக்கிறீங்க. உங்கட மனசுக்கும் உடம்புக்கும் நிறைய ஓய்வு தேவையாம். பிரஷரும் அதிகமாக இருக்காம். இந்த விழா எல்லாம் வேணாம் உம்மா. உங்க ஆரோக்கியம்தான் எனக்கு முக்கியம். இந்த விழாவை நானே நிறுத்திடுரேன் உம்மா. இப்பவாவது நா சொல்றதை கேளுங்க. ப்ளீஸ்"

"வேணாம் மவன். இந்த விழா கண்டிப்பா நடக்கனும்"

உறுதியாகக் கூறினாள். விழா நாள் விடிந்து, விழா துவங்க இன்னும் சில நிமிடங்களே பாக்கி இருந்தது.

அந்த மண்டபத்தில் ஒரு சிலவற்றைத் தவிர மற்ற நாற்காலிகள் யாவும் வெறுமையாக இருப்பது அவளுக்கு மிகவும் வேதனையைத் தந்தது.

அதற்கு காரணம் அவள் பல மாதங்களுக்கு முன்னால் ஒரு வேலை விடயமாக பின்தங்கிய கிராமம் ஒன்றுக்கு செல்ல நேர்ந்தது. அங்குள்ள மக்கள் தண்ணீர் வசதியின்றி பெருந்துயரை அனுபவித்துக் கொண்டிருந்தனர். நீண்ட தூரத்தில் இருந்து தண்ணீர் சுமந்து வருவதை நேரில் கண்டு மிகவும் கவலை அடைந்தாள். எப்படியாவது அந்தக் கிராம மக்களுக்கு பொதுக் கிணறு ஒன்றை நிர்மாணித்து அவர்களது தண்ணீர் கஷ்டத்தைப் போக்க வேண்டுமென்று முடிவு செய்து கிணற்றுக்குரிய இடத்தையும் தெரிவு செய்துவிட்டே திரும்பினாள்.

அவர்களுக்கு இன்றைய அன்பளிப்புக்களை தர்மமாக வழங்க வேண்டுமென அவர்களையும் அழைத்திருந்தாள். அதற்காகவே அவளது கணவரது இரண்டாவது ஆண்டு நிறைவு தினத்தில் இந்த விழாவை ஏற்பாடு செய்திருந்தாள். இவை எதுவுமே நிறைவேறாமல் போய் விடுமோ என்ற கவலையில் அவளுக்கு அழுகையே வந்துவிட்டது.

மீண்டும் மண்டபத்தை நோக்கினாள். மண்டபம் நிறைந்திருந்தது. இருக்காது இது வெறும் பிரம்மையாக இருக்கலாம்.

"விழாவுக்கு சனம் வந்திருக்கிதா மவன்?" தனது மகனிடம் வினவினாள்.

''ஓ... உம்மா ஹோல் நிறைஞ்சிட்டது'' என்றான்.

ஆம்... உண்மையாகவே மண்டபம் நிரம்பி வழிந்தது. அவள் நினைத்துப் பார்க்காத அளவுக்கு நூல் வெளியீட்டு விழா மிக விமர்சையாக நடந்தது. நினைக்காத அளவுக்கு அன்பளிப்புக்கள் சேர்ந்தன. கிணறு கட்டுவதற்காக முழுத் தொகையையும் கொடுத்தாள்.

இப்போது அவளுக்கு நிம்மதி. திருப்தியோடு வீடு திரும்பினாள்!!! ■

பல்சுவை

# தமிழ்நெஞ்சம்

மார்ச் 2017

## இன்னுமா உறக்கம் ?
## இனியுமா தயக்கம் ?

என்னடா இன்னும் ஏய்ப்போனுக்கே
எடுபுடி ஆகவே
கிடக்கின்றாய் - தமிழ்
மண்ணில் உழவர் மடிந்து சாகிறார்
மீட்போம் தமிழ்நிலம்
அடங்குகிறார்

இந்தியன் திராவிடன் இனத்தை அழிப்பான்
இமைக்குள் பரிதி
முளைக்கட்டும - நாம்
முந்தி பிறந்த முதலினம் என்பதை
மூளை யோடு
நினைக்கட்டும்

அடிமை வாழ்வா? அடங்கல் உயர்வா?
அனலை நெஞ்சில்
ஏந்திடுவாய் - புது
விடியல் மண்ணில் விதைக்க வேண்டி
விழியை மூடல்
தவிர்த்திடுவாய்

தமிழன் அல்லான் தலைமை அனைத்தும்
தவிடு பொடியாய்
ஆக்கிடுவாய - நாம்
தமிழர் என்பதை தடைகள் உடைத்து
தலைமை தாங்கிட
ஊக்கிடுவாய்

புதுவைத் தமிழ்நெஞ்சன்